# அசோகன்

பரமசிவ நிலையம்,
127, லாயிட்ஸ் ரோட்,
சென்னை-6.

கி. மா. பக்தவத்சலம்

அருணோதயம்
ராயப்பேட்டை—சென்னை-14

அருணோதயம் வெளியீடு 36
முதற் பதிப்பு செப்டம்பர் 1957.
பதிப்புரிமை பெற்றது.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 77
நன்கொடை எண்: 77

| | | |
|---|---|---|
| சாதாப் பதிப்பு | ரூ. | 1—25 |
| நூல் நிலையப் பதிப்பு | ரூ. | 1—75 |

இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ், மைலாப்பூர், சென்னை-4.

# நாடகத்தில் நடமாடுபவர்கள்

| | | |
|---|---|---|
| அசோகன் | ... | மௌரிய குல மகிபருள் மூன்றாவது மன்னன் |
| உபகுப்தர் | .. | பௌத்த பிக்ஷு |
| மிகிரகுலன் | ... | தக்ஷசீல சிற்றரசன் |
| இராகுலன் | ... | தக்ஷசீல சிற்றரசனின் தம்பி |
| இரதகுப்தர் | ... | அசோகரின் அமைச்சர் |
| நரசிங்க தேவன் | ... | கலிங்க நாட்டரசன் |
| நந்திதேவன் | ... | கலிங்க நாட்டின் படைத்தளபதி |
| பாணக்கியர், பட்டர் | ... | அரண்மனைப் புலவர்கள் |
| சங்கமித்திரை | ... | இளவரசி, அசோகனின் மகள் |
| வித்தியாவதி | ... | கலிங்கநாட்டுப் படைத் தளபதியின் மனைவி |
| சங்கமாலை | ... | சங்கமித்திரையின் தோழி |
| வாசவதத்தா | ... | பாடலிபுர அரண்மனை ஆடலழகி |

மற்றும் பிரபுக்கள், படை வீரர்கள், பணிப்பெண்கள் நடன மாதர்கள்.

நாடகமாக நடிக்க விரும்புவோர்
ஆசிரியர் தம் இசைவு
பெறவேண்டும்.

காமராசர் பல்கலை
தமிழியல்துறை

# அசோகன்

## காட்சி 1

காலம் : கி. மு. 273 ஆண்டுகளுக்கு முன்னுல் மௌரிய குல மகிபருள் மூன்ருவது மன்னனுன அசோகன் அரியணையில் அமர்ந்து இருக்கின்ருன். அசோகன் ஆட்சி பீடமேறிய எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு .........அதாவது ஏறக்குறைய 2200 ஆண்டுகளுக்கு முன்னுல்......

இடம். பாடலிபுரம்—அரண்மனே, ஓர் மண்டபம்.

இருப்போர் : அசோகன், சங்கமித்திரை, சங்கமாலே, ரதகுப்தர், பாணக்கியர், பணிப் பெண்கள், காவலாளி, தூதுவன்.

நிலே : (அசோகனின் அன்புக்கும் அரசுக்கும் வாரிசான சங்கமித்திரை நடனம் ஆட, அருகில் அமர்ந்தபடி மகிழ்ந்திருக்கிருன் அசோகன். ஆடி முடிந்ததும், சங்கமித்திரை அசோகனுக்கு அருகில் வந்து அமர்ந்து கொள்கிருள்......)

சங்கமாலே : இளவரசி இன்றுபோல் என்றும் ஆடியதே இல்லே.

சங்கமித்திரை : இவள் எப்போதும் இப்படித்தான் !

சங்கமாலே : அப்படியென்ருல்......

சங்கமித்திரை : நீ எப்போது பேசினுலும் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளும்படியாக இருக்கும் என்றேன். (அசோ

கனைப் பார்த்து) அப்பா ! நீங்கள் சொல்லுங்கள், இன்றைக்கு என் ஆட்டம் எப்படி ?

அசோகன் : ஆட்டமா, அது !

(சங்கமாலை சிரிக்கிருள்.)

சங்கமித்திரை : (பொய்க் கோபத்தோடு) இப்படிப் பேசுவதற்கு சங்கமாலையிடம் கற்றுக் கொண்டீர்களா ?

(எழுந்து போகத் திரும்புகிருள்.)

சங்கமாலை : அரசே ! காலை முதலில் வைத்தியரிடம் காட்ட வேண்டும்......

அசோகன் : இளவரசி நொண்டிஞள் என்று நினைத்துக் கொண் டாயா ? இல்லையம்மா, இல்லை !

(தோழிகள் சிரிக்கிருர்கள்.)

சங்கமித்திரை : உங்களுக்கு எப்போதும் கேலிதான்.

பாணக்கியர் : நான் சொல்கிறேன், நம்புங்கள் தேவி. வானமுகில் கண்டாடும் கான மயில்போல் இருந்தது உங்கள் நாட்டியம். வில்லைப்போல் வளைந்தீர்கள் ! அம்பைப்போல் பறந்தீர்கள்...

(காவலாளி ஒருவன் வந்து வணங்குகிருன்.)

அசோகன் : என்ன ?

காவலாளி : அரசே ! அமைச்சர் வருகிருர்......

அசோகன் : வரச் சொல்.

(காவலாளி வணங்கிவிட்டுச் செல்கிருன். அமைச்சர் ரதகுப்த ரும் தூதுவனும் வருகின்றனர்.)

ரதகுப்தர் : (வணங்கி) கப்பம் கட்ட மறுத்து விட்டாராம் கலிங்க நாட்டரசர் !

அசோகன் : (ஆச்சரியத்துடன்) மறுத்துவிட்டாஞ ?

தூதுவன் : ஆம் அரசே ! சூடான வார்த்தைகளால் மேன்மை தங்கிய மன்னர் அவர்களை கலிங்கநாட்டரசர் சுட்டிருக்கிருர். துரும்பும் தரமாட்டேன். துள்ளினுல் உங்கள் துடுக்கை அடக்க எனக்கும் தெரியும்" என்ருர்.

அசோகன் : (ஆத்திரத்துடன்) அப்படியா ?

தூதுவன் : பயமுறுத்தலாம் இது, பணியமாட்டாராம் ! மோதினுல் —மௌரியப் பேரரசே பூண்டற்றுப் போகுமாம் !......

அசோகன் ; (குறுக்கிட்டு, கோபமாக) அமைச்சரே! நம்மைத் துச்சமென மதித்துத் தூறு செய்தோனை தூள் தூளாக்க வேண்டும். கனிவாகக் கேட்டோம் ; உடன்பாட்டைச் சுட்டிக் காட்டிக் கேட்டோம் ; அவன் ஒப்புக்கொண்டதைக் கேட்டோம். பணிந்து போக மறுத்துவிட்டான். பூண்டற்றுப் போகுமாம். பூச்சாண்டி காட்டுகிறுன் ! அமைச்சரே ! கலிங்கநாட்டரசனின் கர்வம் அடங்க நாம் பாடம் கற்பித்தேயாகவேண்டும். பகலவனின்முன் பனித்துளியும் சிங்கத்தின்முன் சிறு நரியும் என்றைக்குமே இருந்ததில்லை. இரும்பைப் பார்த்து துரும்பா ஏளனம் செய்வது ?...போர் தொடுப்போம் ; அவன் துடுக்கை அடக்குவோம். காலதாமதம் கூடாது ; கலிங்கம் நம் காலடியில்.

(தரையை ஓங்கித் தன் காலால் தட்டுகிறுன்.)

## காட்சி 2

காலம் : காலை

இடம் : ஓர் வீதி

நிலை : (போர்ப்பரணி பாடி அசோகனின் பெரும்படை அணிவகுத்துச் செல்கிறது.)

## காட்சி 3

காலம் : காலை

இடம் : கலிங்க நாடு, படைத்தளபதி நந்திதேவனின் இல்லம்.

இருப்போர் : நந்திதேவன், வித்தியாவதி.

நிலை : (போர்க்கவசம் அணிந்து இருக்கிறுன் நந்திதேவன். வித்தியாவதி அவன் மார்பின்மீது சாய்ந்துகொண்டு விம்முகிறுள். தூரத்தில் போர் முரசு, தாரை, தப்பட்டை, கொம்பு முதலியவைகள் முழங்குவது கேட்கின்றது.)

நந்திதேவன் : வித்தியா ! நீயா இப்படி விம்முவது ? கர்ப்பிணி யான நீ இப்படிக் கண்ணீர் விட்டுக் கலங்கலாமா ?

வித்தியாவதி : இந்த நிலையில் என்னைத் தனியாக விட்டுவிட்டு, நீங்கள் மட்டும் போகலாமா ?

நந்திதேவன் : வித்தியா ! விளையாட்டுக்காகக்கூட நான் உன்னை விட்டுப் பிரிய விரும்பியதில்லை. ஆனால், கடமை இப்போது என்னை அழைக்கிறது. அசோகவர்த்தனரின் படைகள் மகா நதிக்கரையில் முகாம் போட்டிருக்கின்றனவாம். உதயமாவ தற்கு முன்பே நான் படைகளுடன் அணிவகுத்து கோட்டை வாயிலில் தயாராக இருக்கவேண்டும் என்று அரசரிடம் இருந்தும் உத்தரவு வந்திருக்கிறது.

வித்தியாவதி : (பயத்துடன்) அப்படியானால் நீங்கள்...

நந்திதேவன் : உடனே புறப்பட்டாக வேண்டும்.

வித்தியாவதி : இந்த நிலையில் நான் எப்படி இங்கே தனியாகக் காலம் கழிப்பேன்.

(விம்மிவிம்மி அழுகிருள்.)

நந்திதேவன் : கண்ணே ! களம் பல சென்று வெற்றிபெற்றுத் திரும் பிய நந்திதேவனின் மனைவியே இப்படி மனம் கலங்கினால், மற்றவர்கள் நிலை எப்படிப்பட்டதாக இருக்கும் ; கொஞ்சம் எண்ணிப்பார். போர்க்கவசம் அணிந்து எத்தனையோ முறை நான் பயங்கர யுத்தகளங்களுக்குச் சென்று வெற்றிமாலை சூடி வந்து இருக்கிறேன், இல்லையா ? எப்போதும் இல்லாத கலக்கம் இப்போதுமட்டும் ஏன் ?

வித்தியாவதி : எவ்வளவோ முறை நீங்கள் பயங்கர யுத்தங்களுக் குச் சென்று வெற்றிபெற்றுத் திரும்பி வந்திருக்கிறீர்கள். அப் பொழுதெல்லாம் கல்லான நெஞ்சத்துடன் கொஞ்சமும் கலங் காமல் உங்களுக்கு விடை கொடுத்து அனுப்பியிருக்கிறேன். ஆனால்...

நந்திதேவன் : இப்பொழுது மாத்திரம் என்ன !

வித்தியாவதி : அசோகனின் படை பெரிதாமே ?

நந்திதேவன் : அதனுலென்ன ? கலிங்க வீரர்கள் கண்ணியமிகுந்தவர்கள் ; கடமை அறிந்தவர்கள் ! கலிங்கத்தை எப்பாடுபட்டேனும் காப்பர் ! கண்ணே !...

(போர் முரசு முழங்குகிறது.)

(அவசரத்துடன்) வித்தியா ! வீணில் மனம் கலங்காதே. வெற்றி நமதே ! அதோ பார் ! முரசு முழங்குகிறது !

(சாளரத்தின் அருகில் சென்று நின்றுகொண்டு)

வீரர்கள் அணிவகுத்து விட்டனர். விடை கொடு, வித்தியா.

வித்தியா : (சிறிது நேரம் அமைதியாக இருந்து) சென்று வாருங்கள் !

நந்திதேவன் : வித்தியா நான் போய் வருகிறேன்.

(விட்டுப் பிரிய முடியாமல் சிறிது நேரம் தவித்து இருந்து, சட்டென்று வெளியே போய்விடுகிருன். குதிரையின் குளம்படி யோசை கேட்கின்றது. வித்தியாவதி மஞ்சத்தின்மீது குப்பற விழுந்து விம்முகிருள்.)

## காட்சி 4

காலம் : மாலை.

இடம் : பாசறை.

இருப்போர் : அசோகன், ரதகுப்தர், நரசிங்கதேவன், தளபதி, வீரர்கள்...

நிலை : (கூடாரத்திற்குள் அசோகன் உலாவிக் கொண்டிருக்கிருன். அமைச்சர் ரதகுப்தர் வருகிருர் அங்கே.)

ரதகுப்தர் : வேந்தே ! எதிரி பிடிபட்டுவிட்டான்....

அசோகன் : பிடிபட்டு விட்டானு ! புறமுதுகுகாட்டி போர்க்களத்தில் இருந்தும் ஓடிப்போன பேடி பிடிபட்டுவிட்டானு ?

ரதகுப்தர் : ஆம், அரசே ! நம் வீரர்களா விட்டுவிடுவார்கள், நரசிங்க தேவனை ?

(கூடாரத்திற்கு வெளியே கூச்சல் கேட்கிறது....கொஞ்ச நேரத்திற்குள் சில வீரர்கள் ஒரு சந்நியாசியைப் பிடித்து இழுத்துக்கொண்டு வருகிருர்கள்.)

அசோகன் : என்ன இது ?

தளபதி : (வணங்கி) மேன்மை தங்கிய மன்னர் அவர்களைப் பழித்தும் இழித்தும் பேசிய நரசிங்கதேவர்.

அசோகன் : (ஆச்சரியத்துடன்) கலிங்க நாட்டுக் காவலன் !

தளபதி : ஆம், அரசே.

ரதகுப்தர் : காவி, தன்னைக் காப்பாற்றும் என்று தப்புக்கணக்குப் போட்டு விட்டார் போல் இருக்கிறது, கலிங்க நாட்டரசர்! நாம், படை வீரத்தோடு பகுத்தறிவும் உடையவர்கள் என்பது இதற்குள் தெரிந்து இருக்கும் நரசிங்க தேவருக்கு!

அசோகன் : கலிங்கத்தின் காவலா! புலி நிகர் அசோகனை எலியென எண்ணி ஏளனமாகப் பேசினுய் அல்லவா ? சிறுத்தையை சிற்றெறும்பென எண்ணிச் சீறினுய் அல்லவா ? ஏறு நடைபோடும் என் பெரும்படை சோற்ருல் அடித்த பிண்டம் என்றும் அதை ஒரே நாளில் அழித்துவிட ஆகும் என்றும் ஆணவம் கொண்டு இருந்தாய் அல்லவா? எங்கே உன் வீரம்! எங்கே உன் விவேகம்?

ரதகுப்தர் : வீரம்—போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடிப்போனதில் இருந்தும், விவேகம்-இந்த வேஷத்தில் இருந்தும் தெரிகிறது வேந்தே!

(வீரர்கள் சிரிக்கிறுர்கள் ஏளனமாக)

அசோகன் : அடங்கி இருந்த வெள்ளம்போல் இருந்தான் அசோகன். கப்பம் கட்ட மறுத்தாய்! கட்டுப்பாட்டை மீறினுய்! கண்ணியத்தை இழந்தாய். தும்பறுந்த மாடுபோல் துள்ளினுய்! கடமையை நினைவூட்ட வந்த என் நாட்டுத் தூதுவர்களை அவமதித்தாய்! நேரடியாகவே எம்மை நிந்தித்தாய்! "அடாது இது" எனப் பலமுறை எச்சரிக்கை அனுப்பினேன். அறிவுரைகளை அலட்சியம் செய்தாய்! ஆணவத்தால் ஆடினுய். விளைவைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல் அணையை உடைத்து விட்டாய்! பார்! பார்! பாடலிபுரம் பெற்றெடுத்த படை வீரர்களின் அறிவையும் ஆற்றலையும் பார்! பாரடா, பார்!

நரசிங்கதேவன் : நாவை அடக்கிப் பேசு.

அசோகன் : நாவை அடக்கினுல் பேசமுடியுமா, நரசிங்கதேவா?

நரசிங்கதேவன் : போதும் உன் பேச்சு; என்னைப் போகவிடு. காலையில் நாம் களத்தில் சந்திப்போம்.

அசோகன் : விட்டு விடவா. . .

தளபதி : (குறுக்கிட்டு) வேந்தே! இவரை விடக் கூடாது, சண்டையில் தோல்வி ஏற்பட்டதும் எப்படியாவது தங்களைக் கொலை செய்துவிட வேண்டும் என்று சதி செய்கிருர்......இந்தச் சதி யாலோசனையில் இவரோடு இவரது இராணுவத்தளகர்த்தர்கள் இருவரும் மெய்க்காவலரும் ஈடுபட்டு இருந்தனர். சந்தேகத்தின் பேரில் சாதுக்கள் உடையில் இருந்த இவர்களைக் கைது செய்ய நாங்கள் சென்றபோது ஏற்பட்ட கைகலப்பில் அவர்கள் எல்லோரும் எங்களால் கொல்லப்பட்டார்கள்......

அசோகன் : அப்படியா! (சிறிது உலாவி நின்று) நரசிங்கதேவா! இந்த முறை உன்னை மன்னித்து விட்டுவிடலாம் என்று முதலில் நினைத்தேன் நான். தேளைக் கொல்லாமல் விட்டு விட்டால் மீண்டும் அது நம்மைத் தீண்டாது என்பதற்கு என்ன உத்திரவாதம்? மணம் பரப்பும் மல்லிகைக் கொடிப்புதர் அடியில் கொடு விஷங்கொண்ட கருநாகம் மறைந்திருக்கக் கூடும் என்கின்றனர், அதை யாரால் மறுக்கமுடியும்?

நரசிங்கதேவன் : வளர்த்துவானேன்? கடைசியாக என்னைச் சிறையில் தள்ள ஏதேதோ வார்த்தை அலங்காரங்களைக் காட்டுகிருய்! அதுவே உன் எண்ணமானுல், அப்படியே செய். வெற்றி பெற்று விட்டோம் என்று வெறி கொண்டு இருக்கிருய். உனக்குக் கிடைத்து இருக்கிற வெற்றி-வானவில்லைப் போன்றது—விரைவில் அது மறைந்துவிடும்!—ஆற்று நீரைப் போன்றது—அவ்வளவும் ஓடிவிடும்!

அசோகன் : நரசிங்கா . . . .

நரசிங்கதேவன் : (குறுக்கிட்டு) காலம் மாறும். நாளை நானேகூட உனக்குப் பாடங் கற்பிக்கக் கூடும். ஏமாந்த காலத்தில் போர் தொடுத்து ஏற்றங் கொண்டோனே; உன்னை என்ன செய்வேன் தெரியுமா?

(பற்களை 'நற நற'வெனக் கடித்து, திடீரென்று திமிறி, தன்னை விடுவித்துக்கொண்டு அசோகன் மேல் பாய்கிருன். இருவரும் போரிடுகிருர்கள்... கடைசியில், நரசிங்கதேவன் களைப்பு அடைந்து கீழே விழுகிருன். காவலாளிகள் விலங்கு கொண்டு அவனைக் கட்டுகின்றனர்.)

அசோகன். இழுத்துச் சென்று பாதுகாப்பில் வைத்திருங்கள் இவனை.

நரசிங்கதேவன்: விசாரணை செய்து நீதி வழங்குவதற்காகவா? அசோகனே! உன்னை எச்சரிக்க நான் ஆசைப்படுகிறேன். விட்டிலைப்போல் விளக்கோடு விளையாட விரும்புகிருய்! அழிவை அணைத்துக் கொள்ளாதே. அரசனுக்கு அரசன் காட்டவேண்டிய அந்தஸ்து அதிகாரங்களோடு என்னை அனுப்பிவை. காலையில் நாம் களத்தில் சந்திப்போம். போர் இன்னும் முடிந்து போய்விடவில்லை......

அசோகன்: களத்தில் சந்திக்கும் கருத்து இருந்திருக்குமானுல் ஏன் இந்தக் காவி? எதற்காக இந்தக் கமண்டலம்? நரசிங்க தேவா இனியும் ஏமாறப் போவதில்லை நான்.

(நரசிங்கதேவன் மௌனமாய் நிற்கிருன்)

(வீரர்களைப் பார்த்து)...ம்...கொண்டு போங்கள்.

(காவலாளிகள் கலிங்க நாட்டரசன் நரசிங்க தேவனை பலவந்தமாக இழுத்துச் செல்கிருர்கள். அசோகன் ஆலோசனை செய்தவண்ணம் உலாவ ஆரம்பிக்கிருன்.)

## காட்சி 5.

காலம். இரவு.

இடம்: பாசறை-கூடாரங்களுக்கு முன்னுல்.

நிலை: (கூடாரங்களுக்கு முன்னுல் அசோகனின் படை வீரர்கள் கூடி இருக்கிருர்கள். தீவட்டிகள் எரி கின்றன. மானிட சமுத்திரத்தில் வழி தவறிப்

போன ஒரு குழந்தையைப்போல பதினேழு, பதினெட்டு வயது நிரம்பிய பாவை ஒருத்தி நின்றிருக்கிருள்—மருண்ட பார்வையோடு தளபதி ஒருவன் அவளைப் பார்த்து, "ஏ! ஏ! ஆடு! உனக்குப் பத்து பொற்காசு தருகிறேன்". என்கிருன்.

அந்தப் பருவப்பெண் 'முடியாது' என்பதுபோல் தலையை ஆட்டுகிருள்.

மதுக்கிண்ணத்தைக் காலி செய்து கொண்டு இருந்த மற்றவர்கள் "ஹி! ஹி!" என்று சிரிக்கிருர்கள். அந்தச் சிரிப்பு தளபதியைக் கேலி செய்வதுபோல் இருக்கவே ஆத்திரம் அடைகிருன் அவன்.

"ஏ! இங்கே வா! இப்படி என் அருகில் வா! . ... வரமாட்டே?" என்று கேட்டுக் கொண்டே தளபதி தன்னுடைய மான்தோல் சவுக்கைச் சுழற்றி, சவுக்கு நுனி அவள் இடுப்பைச் சுற்றி விழும்படி அடித்து இழுக்கிருன்,

அவள் பம்பரம்போல் 'சர சர'வெனச் சுழன்று அவன் காலடியில் வந்து விழுகிருள், அப்படியே அந்தத் தளபதி அவளை முத்தமிட்டு அணைக்கக் குனிகிருன். அவள் விலகிப்போய் நிலை கொள்ளாமல் தள்ளாடுகிருள். அவள் ஆடுவதாக நினைத்துக் கொண்டு ஒரு வீரன் பாட ஆரம்பித்து விடுகிருன். அங்கு, ஆடலும் பாடலுமாக ஒரே அமர்க்களம்.)

## காட்சி 6.

காலம். இரவு,

இடம். பாசறை—அசோகனின் கூடாரத்திற்கு முன்னல்.

இருப்போர் : அசோகன், ஒரு பெண்

நிலை ; (அசோகனின் கூடாரம்—அந்தப் பட்டுப் படுதாத் துணிகள் காற்றில் 'படபட'வென்று அடித்துக் கொண்டு இருக்கின்றன.

நெஞ்சில் ஏதோ நினைத்தவனாய் அசோகன் நின்று கொண்டு இருக்கிறான்.

அப்போது அந்த வழியாக, காவல் புரிந்து கொண்டு இருக்கும் கிரேக்க அடிமைகள் கண்களில் படாமல் யாரோ ஒருத்தி அவிழ்ந்த கூந்தலுடன், கலைந்த ஆடையைக் கைகளில் வாரிப் பிடித்துக்கொண்டு அவசரம் அவசரமாக ஓடுகிறாள். திகைப்படைந்த அசோகன் அந்தப் பெண்ணைத் துரத்தித் தொடர்ந்து ஓடுகிறான்.)

## காட்சி. 7

காலம்: இரவு நடுநிசி.

இடம்: போர்க்களம்—மகாநதிக்கரை.

இருப்போர் : அசோகன், ஒரு பெண், பிணக்குவியல்.

நிலை : ("ஆ! என்ன பயங்கரமான படுகொலை இது" என ஆகாயம் கண்களை இறுக மூடிக்கொண்டு இருந்தது. அந்தகாரமும் அமைதியின்மையும் அந்த இடத்தைக் கோரமாக ஆட்சி புரிந்துகொண்டு இருந்தன. பிணங்களை நரிகள் இழுத்துச் செல்லும்போதும் கிழிக்கும்போதும் உண்டாகும் பயங்கர சப்தத்துடன், போரின்போது தலை வேறு முண்டம் வேறு, கைவேறு கால்கள் வேறாகத் துண்டிக்கப்பட்ட துருப்புகளின் இறுதி மூச்சும் முனகலும் காற்றோடு கலந்துவந்தன. பிணக் குவியலில், கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அசோகனின் கூடாரம் இருந்த வழியாக ஓடி வந்த ஒரு பெண் யாரையோ தேடிக் கொண்டு இருந்தாள். பின்னாலேயே ஓடிவந்த அசோகன் அவளைப் பிடித்துக் கொள்கிறான்......)

பெண் : விட்டுவிடு, உன் காலில் விழுகிறேன். கூடாரத்திற்கு என்னைத்திரும்பவும் கொண்டுபோகவேண்டாம்.. வீரர்களுக்கு —அந்த வெறியர்களுக்கு விருந்தாக என்னை வற்புறுத்த வேண்டாம்......

அசோகன் : இங்கே என்ன செய்யப்போகிருய் ?

பெண் : தேடிப் பார்க்கிறேன்.

அசோகன் : பேயைப்போல இந்தப் பிணக்காட்டில் நீ யாரைத் தேடிப் பார்க்கிருய் ?

பெண் : என் கணவரை !

அசோகன் : (ஆச்சரியத்துடன்) கல்யாணமானவளா நீ ?

பெண் : கல்யாணமானவள் மாத்திரமல்ல ; அசோகனின் மண்ணுசைக்குக் கலிங்கத்தின் காலாட்படைத் தளபதியான என் கணவனைப் பலி கொடுத்த அபலையுமாவேன் ! போர் முடிவை அறிந்துகொள்ள புஷ்பச்சந்தைக்கு வந்தபோது, பாடலீபுர வீரர்களால் தூக்கிச் செல்லப்பட்டு பலவந்தமாகக் கற்பழிக்கப்பட்ட பேதையுமாவேன் !

அசோகன் . கற்பழித்தார்களா ?

பெண் : அது மாத்திரமா ? அந்தக் கொடியவர்கள் இச்சைக்கு இணங்க மறுத்த என்னை பெண் என்றும் பாராமல் மான்தோல் சவுக்குக் கொண்டு அடித்தார்கள் !...

அசோகன் : அடித்தார்களா ?

பெண் : நகக்கண்ணியில் ஊசியேற்றி நான் துடிதுடிக்கப் பார்த்து நகைத்தார்கள். " குத்தீட்டி கொண்டுவந்து குத்துங்கள் : கோடாரியால் என் உடலை இரண்டு கூருகப் பிழந்துபோடுங் கள். உயிர் உள்ள மட்டும் உங்களின் இச்சைக்கு இணங்க ஒரு போதும் நான் ஒப்பமாட்டேன் " என்று அப்போதும் கூச் சலிட்டேன்...

(நெஞ்சு விரியும் அழுகையோடு)

கடைசியில்...பலாத்காரம் செய்து ஒருவன் என்னைக் கெடுத்தே விட்டான்......

(அவள் அழுகை வரவர அதிகரித்தது
சிறிது நேரம் அசோகனும் செயலற்று இருக்கிறன்)

அசோகன் : கால்வேறு, கைவேருக, தலைவேறு, முண்டம் வேரு கத் துண்டிக்கப்பட்டு இருக்கும் இந்த பிணக்குவியலில் உன் கணவனைத் தேடிக் கண்டுபிடிப்பது சுலபமென்று நீ நினைக் கிருயா ?

(பேசாமல் நிற்கிருள் அந்தப் பெண். அசோகன் சட்டென்று அந்தப் பெண்ணின் வலதுகையைத் தூக்கிப் பிடித்து)

அசோகன் : ...ம் ......கையில் இதென்ன காயம் !

(அந்தப் பெண் அசோகனிடம் இருந்து தன் கையை இழுத்துக் கொள்ளாமல்-கலவரப்படா மல் அதைப் பார்த்தபடியே சொன்னுள்)

பெண் : பாடலீபுர படைத்தலைவனின் பஞ்சணையில் இரவைக் கழிக்க மறுத்ததற்காக எனக்குக் கிடைத்த பரிசு......நீங்கள் யார் ?

அசோகன் : (அமைதியாக) அசோகன்.

(அதைக் கேட்டதும் அப்பெண் அதிர்ச்சி அடைந்து பயத்தால் "கிரீச்"சென அலறி ஓடி ...அடிபட்டு களத்திலே இறந்துகிடந்த ஒரு யானை யின் மீது கால் இடற, கீழே விழுகிருள்...துரத் திச் சென்று அசோகன் அந்தப் பெண்ணைப் பிடித்துத் தூக்குகிருன்.)

பெண் : உங்க...ளால்.. அல்...லவா...எங்...களு...க்கு...இ...ந்த...அழி...வு......

(அந்தப் பெண் பேசியது அவ்வளவுதான். முடி வாகக் கண்கள் மூடிக் கொண்டன. அசோகன் அவளைத் தரையில் கிடத்தி . துணிகொண்டு அவள் முகத்தை மறைக்கிருன்.)

## காட்சி 8.

காலம். நள்ளிரவு

இடம். போர்க்களம் (தொடர்ச்சி)

இருப்போர் : அசோகன், பிணக்குவியல்

நிலை : (அசோகன் பிணக்குவியல்கள் இடையே நடந்து செல்கிருன். பிணங்கள் உயிர் பெற்று தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலவும் "உங்களால் அல்லவா எங்களுக்கு இந்த அழிவு" எனக் கேட்பது போலவும் போன்றதோர் பிரமையேற்படுகிறது அசோகனுக்கு.)

பெண்குரல் : உங்களால் அல்லவா எங்களுக்கு இந்த அழிவு? உங்களால் அல்லவா எங்களுக்கு இந்த அழிவு?

அசோகன் : என்ன! இவ்வளவு பெரிய அழிவுக்கு நானு காரணம்?

மனம் : ஆம்!

அசோகன் : எப்படி?

மனம் : அசோகனே! அதை எப்படி உன்னுல் உணர்ந்து கொள்ள முடியும்? சரித்திரமே கண்டறியாதவொரு மாபெரும் வெற்றியைச் சாதித்து விட்டதாகச் சந்தோஷம் கொண்டிருக்கிருய்! "வெற்றி எட்டு திக்கு முற்றிலுமே சென்று மேவிட ஆள்பவன்" நீ என வெறி கொண்டு இருக்கிருய்! ஆனுல், அந்த வெற்றியை நீ எவ்வாறு அடைந்தாய் என்பதை அறிவாயா!

அசோகன் : என்ன!

மனம் : பாரடா, பார்! போர்க்களத்திலே—பகைவனின் பலவீனத்திலே—பிணக்குவியல்களின் அஸ்திவாரத்திலே-அரச வெறியிலே-வீரரின் முனகல்களிலே—அதன் வேதனையிலே-பிணங்களை நரிகள் இழுத்துச் செல்லும்போது கிழிக்கும்போது உண்டான பயங்கரச் சப்தத்திலே சிற்றெறும்பைச் சிறுத்தையென்ற வகையிலே அந்த மகத்தான வெற்றியை நீ அடைந்திருக்கிருய்.

அசோகன் : ஆம், ஆம்.

(ஆலோசித்து—தனக்குள்)

போர் புரிதல் அரசகுலத்தோர் அறம்! அதனுல் ஏற்படும் அழிவுகளைக் குறித்து ஆயாசம் கொள்வது அறிவீனம்!

மனம் : ஆயாசப்படத் தேவையில்லைதான். ஆனுல், ஆலோசனை செய்து பார்ப்பது அவசியம் இல்லையா ? அசோகனே! எதனுல் இந்தப் போர் ஏற்பட்டது? கலிங்கம் ஏன் ரணகளமாயிற்று ? கலிங்க நாட்டு மன்னன் நரசிங்கதேவன் உனக்குக் கப்பம் கட்ட மறுக்க வேண்டும்? எவ்வளவு காலம்தான் கலிங்க நாட்டுக் காவலன் உன்னை எஜமானனுக ஏற்றுக்கொண்டு இருப்பான்? நரசிங்கதேவன் மனிதனில்லையா? தானத்தைப் பெரிதென மதிப்பவன் இல்லையா? உன்னெருவன் பெயரும் புகழும் ஓங்க பேரரசன் என்ற பட்டமோடு நீ ஒருவன் உல காள-பாராள வேந்தர் பலரும் உன் பாதம் பணிய வாழும் கோடிக்கணக்கான உயிர்களை-ஒரு பாவமும் பயனும் அறியாத "அப்பாவிகளை" போர் என்ற பெயரைச் சொல்லி—அது அரச குலத்தோர் அறமென்ற ஆணையும் காட்டிப் பொசுக்கி விட்டாயே ? அறிவு கெட்டவனே! கலிங்கத்தின் பொக்கிஷம் உன் காலடியில் கிடக்கிறது. பூட்டிய இரும்புப் பெட்டிகளுக் குள் பொன்னும் மணியும் முத்தும் பவளமும் ஏராளமாக இருக்கின்றன. எண்ணிப்பார்—கொஞ்சம் பொன்னும் பூமி யும் கலிங்க நாட்டு அரசன் கொடுக்க மறுத்த காரணத்தால் உன்னுல் எவ்வளவு பேர் கொல்லப்பட்டவர்கள்! பார், பார்! இந்தப் பரிதாபத்திற்கு உரியவர்களைப் பார்! இவர்களுள் ஒருவ னுக்காவது உன்னுல் உயிர் கொடுக்க முடியுமா ? வாழும் உயிர்களை வாங்க வகை தெரிந்த உனக்கு வீழ்ந்து கிடக்கும் இந்த வீரர்களில் எவனையேனும் உயிரூட்டி எழுப்பும் விவே கம் உண்டா ?......எங்கே உன் பதில்!......இதற்கு நீ என்ன சொல்லப் போகிருய்?......

(அசோகன் மௌனமாக இருக்கிருன்)

மௌரியகுல மகிபனே ஏன் இந்த மௌனம் ?

அசோகன் : (மனம் வருந்தி) பாவி நான்! படுமோசம் போனேன்! நானிலம் காண நாணிடும் இந்த நாசத்திற்கு நானே காரணம்! கோடிக்கணக்கான உயிர்களை கொஞ்சம் பொன்னுக்கும்

பூமிக்கும் ஆசைப்பட்டுக்கொண்டு யுத்த களத்தில் என்னெருவன் தன்னலத்திற்காகக் கொன்று குவித்த கொடுங்கோலன் நான்! அக்கிரமம், சூழ்ச்சி, அதிகாரப் பேராசை, கொக்கரிக்கக் கண்டும் உண்மை உணராத உலுத்தன் நான்! நெஞ்சில் சிறிதும் இரக்கம் இல்லாத அரக்கன் நான்! மனிதனுக்கு மனிதன் விட்டுக் கொடுக்கும் மனமின்றி மனிதனை மனிதன் கொன்று குவித்திட, அந்தப் பிணக்குன்றுகளின் மீது ஏறி நின்று கொண்டு "பாரீர்! என் பராக்கிரமத்தை;" என்று கூவித்திரிந்த கோணல் மதிக்காரன் நான்! மாபாதகன் நான்! மாபாதகன்......!

(பிணங்களின் மீது அசோகன் விழுந்து புலம்புகிருன்.)

## காட்சி 9.

காலம். காலை.

இடம். பாசறை—அசோகனின் கூடாரத்திற்குள்

இருப்போர் : அசோகன், ரதகுப்தர், பாணக்கியர்

நிலை : (அசோகன் துயரமே உருவாய் அமர்ந்திருக்கிருன். அவனுக்கு முன்னல் பொன்னும் வெள்ளியும், அணிமணிகளும் பட்டுப் பட்டாடைகளும் குவிக்கப்பட்டு இருக்கின்றன. அசோகனுக்கு ஆறுதலூட்ட அமைச்சர் ரதகுப்தரும் அரண்மனைப் புலவர் பாணக்கியரும் வருகின்றனர் அங்கே.)

ரதகுப்தர் : வேந்தே எதற்காக இந்த விசாரம் ?

பாணக்கியர் : ஏக்கங் கொண்டு இருக்கவேண்டியவர்கள் நம் எதிரிகளன்றே ?

ரதகுப்தர் : சமரில்—சரித்திரமே கண்டறியாத ஒரு மாபெரும் வெற்றியை நாம் பெற்றிருக்கிற இந்த நல்ல சமயத்தில் எதற்காக சஞ்சலம் ?

அசோகன் : அமைச்சரே! களம் பல நான் கண்டிருக்கிறேன்; என்றும் இன்றுபோல் கலங்கியதில்லை. குருதி கொட்டக் கொட்டக் குற்றுயிராய்க் கிடந்தோர் குவியலைக் கண்டும் நான்

குன்றுபோல் நின்றிருக்கிறேன்! வேல் பாய்ந்த வேழம், அங்கவீனமான அசுவம், தலைவேறு முண்டம் வேறாக, கைவேறு கால் வேறாகத் துண்டிக்கப்பட்ட துருப்புகள், சமரில் தங்கள் உயிரையும் திரணமாக மதித்து என்னைக் காத்த தோழர்கள் விரோதிகளால் வெட்டிச் சாய்க்கப்பட்டபோது—எதையும் எங்கும் கண்டு நான் வேதனைப்பட்டதில்லை. ஆனால், கலிங்கப் போரில் நான் கண்ட காட்சிகள்...

பாணக்கியர் : சக்கரவர்த்தி! நடந்தவைகளுக்காகச் சஞ்சலப்படுவதால்என்ன பலனைக் காணப்போகிறீர்கள்? சஞ்சலப்படுவதால் மட்டும் இந்தக் கஷ்டமும் நஷ்டமும் சரியாகி விடுமா ?

அசோகன் : உண்மைதான். ஆனாலும்...

ரதகுப்தர் : அல்லற்படும் தங்கள் உள்ளம் ஆறுதல் பெறுவதற்காக வேண்டுமானால் உடனடியாக ஒன்றை நாம் செய்யலாம். .....

அசோகன் : என்ன அது ?

ரதகுப்தர் : போரில் பாதிக்கப்பட்டவர் குடும்பங்களுக்கு உடனடியாகப் பொருளுதவி புரியலாம். அத்துடன் . . .

பாணக்கியர் : (குறுக்கிட்டு) இந்தப் போரினால் ஏற்பட்ட பாபத்தைப் போக்கிக் கொள்வதற்காக ஆயிரம் அந்தணச் சிரேஷ்டர்களுக்குச் சந்தர்ப்பணை கொடுப்பது சிலாக்கியமானதாக இருக்கும். இது இல்லாமல் பிராம்மணோத்தமர்களைக் கொண்டு பிரம்மாண்டமானதோர் யாகம் செய்வித்து எரியும் குண்டத்தில் பதினாயிரம் ஆடுகளைப் பலியிடுங்கள்... அதுபோதும், தோஷம் நாசம் ! அரசர்க்கு ஆயுள் விருத்தியோடு இந்திரன், சந்திரன், முதலானவர்கள் பெற்றுள்ளதைப் போன்றதொரு மேலான பதவிகளும் சித்திக்கும் !

அசோகன் : ஆயிரம் பேருக்கு என்ன, இன்னும் அதிகமானவர்களுக்கும் அடிசிலிடுங்கள். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால்...

பாணக்கியர் : ஆனாலென்ன ?

அசோகன் : மாண்டவர் தொகையே அதிகம் என எண்ணி என் மனம் சஞ்சலம் அடைந்திருக்க நீங்கள் வேறு, பதினாயிரம்

ஆடுகளை எரியும் குண்டத்தில் பலியிட வேண்டும் என்று சொல்கிறீர்களே ! பாணக்கியரே, பொருந்துமா உங்கள் போதனை ?

பாணக்கியர் : பேஷாய் ! ஈஸ்வர சங்கல்பம் இப்படி எல்லாம் ஆகவேண்டும் என்று இருக்கிறது. நீரும் நானும் என்னசெய்ய முடியும் ? படையெடுப்பிற்கு முன்னுல் கொஞ்சம் எண்ணிப் பார்த்திருந்தால்...

பாணக்கியர் : ஏ ராஜன் ! நேக்கு பகவான் நாக்கில் இருந்துண்டு அநுக்ரகிக்கிறதைச் சொன்னேன், பிறகு, உம் பிரியம் !

ரதகுப்தர் : இதைப்பற்றி எல்லாம் நிதானமாக யோசித்து நாம் ஒரு முடிவிற்கு வரலாம்...

அசோகன் : ஆமாம், ஆமாம். பாடலிபுரம் சென்றதும் எல்லா வற்றையும் பார்த்துக்கொள்வோம் ! அமைச்சரே ! நாளைக் காலையில் நாம் புறப்படவேண்டும்...

ரதகுப்தர் : வேண்டிய ஏற்பாடுகளை.........

அசோகன் : விரைவில் செய்யுங்கள்.

ரதகுப்தர் : உத்தரவு.

(வணங்கிவிட்டுச் செல்கிருர்)

## காட்சி 10.

காலம். காலை

இடம். பாடலீபுரம்–அரசவீதி

இருப்போர் : அசோகன், ரதகுப்தர், நரசிங்கதேவன், பாணக்கியர், படைவீரர்கள், மக்கள்...

(முரசு முழங்குகிறது. " வருக ! வருக ! வெற்றி வீரரே வருக ! விறல்கெழு வேந்தரே வருக !" என மக்கள் மகிழ்ச்சியோடு மன்னன் அசோகனை வரவேற்கின்றனர். மாடங்களில் இருந்து மலர் தூவி மங்கையர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரி வித்துக் கொள்கின்றனர். குறுநில மன்னர்கள்

மண்டியிட்டு வணங்கித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

கலிங்கநாட்டரசன் நரசிங்கதேவனை இரும்புச் சங்கிலி கொண்டு பிணைத்து முன்னால் இழுத்துச் செல்ல, பெரும்படையும் தம்பால் மிகுந்த பிரியம் கொண்ட பெருங்குடி மக்களும் பிரபுக்களும் பின் தொடர ஆரவாரத்தோடு அசோகன் அரண்மனை வாயிலுக்குள் பிரவேசிக்கிறான்

அசோகனை அந்தணர்கள் ஆசீர்வதிக்கிறார்கள்)

## காட்சி. 11.

காலம். இரவு.

இடம். சிறைச்சாலை

இருப்போர் : நரசிங்கதேவன், சிறை அதிகாரி, இரண்டு காவலாளிகள், அசோகன், ரதகுப்தர், மருத்துவர்...

(காவலாளிகள் சொக்கட்டான் ஆடிக்களித் திருக்கின்றனர், தாகத்தால் நரசிங்கதேவன் தவித்திருக்கிறான்.

நரசிங்கதேவன் : ஏ ! யார் அங்கே ?

(காவலாளிகள் சொக்கட்டான் ஆடுவதில் கருத் தாயிருக்கின்றனர்.)

ஏ ! யாரெங்கே வா இங்கே !

காவலாளி-1. (ஆடிக்கொண்டே) யார்ரா இவன், பெரிய உபத்திரவக்காரனா வந்து சேர்ந்திருக்கான்...

நரசிங்கதேவன் : (உரத்த குரலில்) ஏ, இங்கே வா !...

காவலாளி-2. கத்திட்டுப்போறான், நீ நம்ப ஆட்டத்தைக் கவனி...

(ஆட்டத்தில் ஒருவன் வெற்றி அடைந்துவிடு கிறான் அந்த ஆனந்தத்தில் சீழ்க்கையடித்தபடி பாடி ஆடுகிறான். அப்போது " ஓய் " என்று உரத்த சத்தமாக நரசிங்கதேவன் கூப்பிடுவதைக் கேட்டுத் திடுக்கிட்டு அருகில் போகிறான்.)

நரசிங்கதேவன் : மடையர்களே! உங்களுக்குப் புத்தியில்லே ? எத்தனை தரம் கூப்பிடுவது ?

காவலாளி: 1 : எங்களுக்கு எல்லாம் இருக்கு. உங்க உபத்திரம் எதற்காக ? சொல்லித் தொலேயுங்கோ

நரசிங்கதேவன் : குடிக்கத் தண்ணீர் வேண்டும்; கொண்டுவா!

காவலாளி-2 : ப்பூ! இதுக்குத்தானு இந்தாப் பெரிய கூச்சல் போட்டீங்க. நாங்க என்னமோ ஏதோன்னு பயந்து போயிட் டோம்.

நரசிங்கதேவன் : (கோபமாக) பேசியது போதும், போடா, போய் கொண்டு வா.

காவலாளி-1 : அட! அதிகாரம் வர வர அதிகமா போவுதே! அதுக்கு எங்களுக்கு வேற ஆளு இருக்காங்கோ . . .

நரசிங்கதேவன் : (ஆத்திரக்குரலில்) கற்பூரத்தின் மணம் அறியாத கழுதைகள் . . .

காவலாளி-2 : தும்பறுந்த மாடுமாதிரி சும்மா துள்ளாதீங்கோ . . . எங்க பெரிய ஐயா உத்திரவு போடாம உங்களுக்கு ஒரு துரும்பும் கொடுக்க மாட்டோம். தலேகிழா நீங்க நின்னுலும் தரமாட்டோம்.

நரசிங்கதேவன் : தண்ணீருக்குக் கூடவா உங்கள் அதிகாரி உத் தரவு தரவேண்டும் ? அக்கிரமக்காரர்கள்! . . . அராஜகர்கள்!

காவலாளி-1: அக்கிரமமோ? உக்கிரமமோ! நீங்க எதுக்குச் சும்மா அலட்டிக்கிறீங்கோ . . . .

(சிரித்துக் கொண்டே போகிருர்கள். பூட்டிய இரும்புக் கூட்டினுள் அடைபட்ட புலியைப்போல நரசிங்கதேவன் உலவிக் கொண்டிருக்கிருன் அவனுடைய உலர்ந்த உதடுகள் அவசரம் அவசர மாக முணு முணுக்கின்றன. கொஞ்ச நேரத்திற் குப்பின் அடியற்ற மரம்போல் மயங்கிக் கீழே விழுகிருன், சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்த காவலாளி ஒருவன் நரசிங்க தேவன் விழுந்த

சத்தத்தைக் கேட்டு விட்டு அருகில் ஓடிவந்து பார்த்துவிட்டு, "ஐயையோ" என்று அலறி, வெளியே ஓடுகிருன். கொஞ்ச நேரங்கழித்து மருத்துவர், ரதகுப்தர், அசோகன் ஆகியோர் அங்கு வருகின்றனர், சிறை அதிகாரி பூட்டைத் திறந்து விடுகிருன். மருத்துவர் நரசிங்கதேவன் உடலைப் புரட்டிப் பரிசோதனை செய்து பார்த்து விட்டு, "இறந்துவிட்டான்" என்பதற்கு அடையாளமாக உதட்டைப் பிதுக்குகிருர். அசோகன் நீண்டதொரு அங்கியை நரசிங்கதேவன் முகத்தை மறைக்கும்படி மூடிவிட்டு வெளியே வருகிருன்.)

## காட்சி 12.

காலம். மாலை

இடம். கோபுர வாசல் வீதி, ஓர் மண்டபத்திற்கு அருகில்.

இருப்போர். சங்கமித்திரை, சங்கமாலை, பணிப்பெண்கள், உபகுப்தர் . . . .

(கோவிலில் இருந்து சங்கமித்திரை பணிப் பெண்களுடன் வந்து கொண்டிருக்கிருள். வழியில், உபகுப்தர் வருகிருர்.)

உபகுப்தர் : சாமி சரணம் கச்சாமி!
சங்கம் சரணம் கச்சாமி !
தர்மம் சரணம் கச்சாமி!

சங்கமித்திரை உபகுப்தரை வணங்குகிருள்.)

மகளே! உனக்குச் சகல மங்களம் உண்டாகட்டும். எழுந்திரு,

சங்கமித்திரை : ஸ்வாமி! நாளை நகரில் வெற்றி விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டிய ஏற்பாடுகளை என் தந்தையே தமது நேற்பார்வையில் கவனித்து வருகிருர். அரண்மனை அவையில் ஆடலுண்டு; பாடலுண்டு; நறுமணங் கமழும் அறுசுவை உணவு உண்டு; நாலாயிரவகை கனி

யுண்டு; பேர் வாய்ந்த போர் வீரர்களுக்குப் பரிசுமுண்டு! ஸ்வாமி! தாங்களும் வந்திருந்து தந்தையையும் என்னையும் ஆசிர்வதித்து வெற்றி விழாவைச் சிறப்பித்து வைக்குமாறு வேண்டுகிறேன்.

உபகுப்தர் : மகளே! உன் அழைப்பிற்கு மிக்க நன்றி. அவைக்கு வந்து ஆடலும் பாடலும் கண்டு அகங்குளிர—அறுசுவை உணவோடு நாலாயிரவகை கனி உண்டு ஆனந்திக்க இந்த அடியேனுக்கு எந்த விதமான ஆட்சேபணையுமில்லை. ஆனால்...

சங்கமித்திரை : ஆனால் என்ன, ஸ்வாமி ?

உபகுப்தர் : இம்சையின் சின்னமாக விளங்கும் இந்த வெற்றி விழாவில் அடியேனைப் போன்ற அகிம்சாவாதிகள் கலந்து கொள்வது முன்னுக்குப் பின் முரணான செயலாயிற்றே என்று தான் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்.

சங்கமித்திரை : ஸ்வாமி! என்ன சொல்கிறீர்கள் ? இரவுக்குப்பின் பகல். இன்பத்திற்குப்பின் துன்பம் இந்த உலக இயற்கை நியதி. களத்தில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை மறப்பதற்காக அல்லவோ இந்தக் களியாட்டம் ? இதை இம்சையின் சின்னம் என்று சொல்வது எப்படிப் பொருந்தும் ?

உபகுப்தர் : மகளே! கலிங்கப் போரில் உன் தந்தை வெற்றி பெற்று விட்டபடியால் நீ களிக்கிறாய் . . .

சங்கமித்திரை : ஆமாம், ஸ்வாமி. நான் மாத்திரமல்ல, இந்த மௌரிய சாம்ராஜ்யம் முழுவதுமே ஆனந்தப் பள்ளுப் பாடுகிறது. சரித்திரமே கண்டறியாத ஒரு மாபெரும் வெற்றியைக் கண்டதாலேயே என் தந்தை சகலமும் செய்கிறார். பாராள் வேந்தர் பலரும் வருவார்; என் தந்தையின் பாதம் வணங்குவார்! பாவாணர் கலிங்கத்துப் பரணி சூட்டிப் பாராட்டுவர்! அணிகலன் பூணுவர் அரிவை மார்கள்! அழகிகள் ஆடுவர். பாடகர் பாடுவர்! பதுமம் போன்ற ஆடவர் முகங்கள் அழகு பெறும்! வீதிதோறும் தோரணம் விளங்கும்! தொல்நகர் வீடு தோறும் ஜோதி தோன்றும்! முரசு எங்கும் முழங்கும்! . . . .

உபகுப்தர் : இன்னும் எவ்வளவு இருந்தாலும் இம்சையின் சின்ன மாகவே இந்த விழா விளங்கும்! . . . . .

சங்கமித்திரை : ஸ்வாமி!

உபகுப்தர் : மகளே! களத்தில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை மறப்பதற்காக அல்லது மாற்றுவதற்காகவே இந்தக் களியாட்டத் திற்கு உன் தந்தை ஏற்பாடு செய்திருக்கிருர் என்ருய் அல் லவா? கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் வாழ்நாள் முழுவதும் கொண்டாட்டம் நடத்திலுைம் ஏற்பட்ட கஷ்டத்தை யும் நஷ்டத்தையும் மறந்துவிட முடியாத நிலையிலுள்ளவர்கள் தொகை அதிகம்.

சங்கமித்திரை : ஸ்வாமி, என்ன சொல்கிறீர்கள் !. . . .

உபகுப்தர் : மகளே ! போர்க்களத்திலே-பகைவரின் பலவீனத் திலே, தலைவேறு முண்டம் வேருக, கைவேறு, கால்கள் வேருகத் துண்டிக்கப்பட்ட உருப்புகளின் துடிதுடிப்பிலே- அதனுல் ஏற்பட்ட துயர கீதத்திலே-கணவனை இழந்து கைம் பெண்களானவர் கதறல்களிலே-தாயைப் பிரிந்த சேய்களின் தவிப்பிலே-சேயைப்பிரிந்த தாய்மார்களின் சோகத்திலே, பாலூட்டி வளர்க்கும் பசுவைப் பறிகொடுத்த பச்சிளங் குழந்தைகளின் பரிதவிப்பிலே தோழனை இழந்த வீரனின் துயரத்திலே அல்லவோ உன்னுடைய தந்தை அடைந்திருக் கிருர் இந்த வெற்றியை ?

சங்கமித்திரை : ஸ்வாமி ! போரிலே வெற்றிபெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இருக்கும் அவர்கள் நியாய், அநியாயங் களையும் நல்லது கெட்டது ஆகியவற்றையும் கருத்தில் கொண் டால் காரியமாற்றுவது எப்படி ? போர்க்களத்தில் நின்று கொண்டு இவைகளைப் பற்றி எல்லாம் நினைத்துப் பார்ப்பது புத்திசாலித்தனமாகுமா ? வேழம் வெட்டுண்டதே, அலெக் ஸாந்திரியா தேசத்து அசுவம் அடிபட்டு அங்கவீனமானதே, தோழனின் கரமிரண்டும் துண்டிக்கப்பட்டதே என்றெல்லாம் களத்தில் கவலைப்படுவது விவேகமாகுமா ? ஸ்வாமி ! சரித் திரமே கண்டறியாத ஒரு மகத்தான வெற்றியைப் பெறுவது என்பது சாமான்யமானதா ?

உபகுப்தர் : சரித்திரமே கண்டறியாத ஒரு மாபெரும் வெற்றியை உன் தந்தை பெற்றுவிட்டார் என்பதால் நீ சந்தோஷப்படு கிருய் ! ஆனால் . . . .

சங்கமித்திரை : என்ன ஸ்வாமி ! . . . .

உபகுப்தர் : சமரில் பாதிக்கப்பட்டோர் குடும்பங்களிலோ இந்த நேரத்தில் சண்டமாருதம் வீசிக்கொண்டிருக்கிறது. இங்கே—ஆனந்தம் ! அங்கே அழுகை ! குதூகலம்—இங்கே ! அங்கே—ஒரே குமுறல் ! இங்கே—விருந்து ! அங்கே—மருந்து ! இங்கே—உல்லாசம் ! அங்கோ—உயிரின் வாதை ! ஏன் இது ஏற்பட்டது ?

சங்கமித்திரை : (குழம்பிய மனதோடு, மெதுவான குரலில்) ஸ்வாமி . . . .

உபகுப்தர் : எவரால் இது ஏற்பட்டது ? மகளே ! பேராசை என்னும் அடிப்படைமீதுதான் போர் என்னும் கோரமாளிகை கட்டப்பட்டு இருக்கிறது. வாழ்க்கையை, சுயநலம், பொருமை பேராசை ஆகிய இவைகள் அனைத்தும் விலக்க முடியாதபடி வளைத்துக் கொண்டு வதைத்து வருகின்றன. ஆற்று நீரைப் போல ஓடிக்கழியும் இந்த அற்ப வாழ்விற்காக மனிதன் எவ்வளவு ஆசாபாசங்களுக்கு அடிமையாகிருன் ! சொல்லக் கூசும் எத்தனை கொடுஞ்செயல்களைச் செய்ய எண்ணங் கொள்கிருன்.

("இளவரசி" என்று கூப்பிட்டுக் கொண்டே சங்கமித்திரையைத் தேடிக்கொண்டு அங்கு வருகிருள் சங்கமாலை. அவள் சங்கமித்திரை உபகுப்தரோடு உரையாடிக் கொண்டிருப்பது அறிந்து ஒருபுறமாக நிற்கிருள் அடக்கவொடுக்கமாக.)

"இளவரசி" என்று உன்னை அழைப்பதும் உன் முன்னல் வேருெரு உயிர் அடங்கி ஒடுங்கி நிற்பதும் எதற்காக ? ஒருவரைக்கண்டு மற்ருெருவர் அஞ்சுவதும் கள்ளக் கும்பிடு போடுவதும் எல்லாம் ஏன் ? எண்ணிப்பார் ; மகளே, எண்

ணிப்பார் ! வலிமையினுல்—வாளினுல் பெறும் வெற்றி வான வில்லைப் போன்றது! வாளைக்கொண்டு உலகத்தை வளமாக்க முடியாதென்று உணர்ந்து அருமைத் தந்தை, அழகு மனைவி, ஆசை மகன், அரண்மனைச் சுகபோகங்கள் அனைத்தும் துச்சமெனத் துறந்து, காடுமலை மேடெல்லாம் கடந்து, அன் பென்னும் அரியகுணம் கொள்ளவேண்டும். ஆசைதனை ஒழிக்கவேண்டும். ஆசையே ஏனைய துன்பங்களுக்கு எல் லாம் அடிப்படை. "ஒன்றே குலம். ஒருவனே தேவன்". என அறிந்து, அந்த அறிவொளியைப் பட்டி தொட்டி முழுவதும் பரப்பி, படித்தோரையும் பாமரரையும் பாராண்டமன்னரையும் ஒப்புக் கொள்ளச்செய்த அக்கருணை வள்ளலை நீ அறிய மாட்டாயா ?

சங்கமித்திரை : (குழம்பிய மனதோடு) ஸ்வாமி . . . .

உபகுப்தர் : மகளே ! சொல்லவேண்டாம். சென்று, சிந்தனை செய்து பார் ! வெற்றி விழாவில் என்னைப் போன்ற பௌத்த பிட்சுக்கள் கலந்து கொள்வது விவேகமாகுமா, என்பது உனக்கே விளங்கும். விடைகொடு மகளே, வருகிறேன். பிச்சைக்குப் போகவேண்டும்.

சாமிசரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி

தர்மம் சரணம் கச்சாமி.

(உபகுப்தர் போகிருர். சங்கமித்திரை அவர் சென்ற திசையைப் பார்த்தபடியே சிற்பி செதுக் காத சித்திரம்போல் நிற்கிருள். அவளைத் தேடிக் கொண்டு அங்குவந்த சங்கமாலை சங்கமித்திரை யின் தோள்களைப் பிடித்துக் குலுக்கி)

சங்கமாலை : தேவியாரை எங்கே எல்லாம் தேடுவது ?

சங்கமித்திரை : எதற்காக தேடினுய் ?

சங்கமாலை : என்னம்மா இது. காலையில்தான் சொன்னுர் ; இதற் குள்ளாகவா மறந்துவிட்டீர்கள் ?

சங்கமித்திரை : என்ன சொன்னூர் ? யார் சொன்னூர் ?

சங்கமாலே : தங்கள் தந்தையார், கலிங்கத்திலிருந்தும் நம் படை வீரர்கள் கவர்ந்து வந்திருக்கும் பொருள்களை எல்லாம் பாடலீ புர மக்களும் வெற்றி விழாவில் கலந்துகொள்ள வந்து கொண் டிருக்கும் வெளியூர்க்காரர்களும் வேற்று நாட்டினரும் கண்டு களிக்க பொருட்காட்சி சாலேயில் வைத்திருக்கிருர் என்றும் பகல்மேல் பொதுஜனங்கள் பார்வையிட அதை திறந்து வைக் கப் போகவேண்டும் என்றும் சொல்லி இருந்தாரே . . . .

சங்கமித்திரை : ஆமாம், ஆமாம். அப்பா என்னேயும் அதற்கு அழைத்திருந்தார். மறந்தேவிட்டேன்.

சங்கமாலே : மன்னர் மறக்கவில்லே. இளவரசியாரை அழைத்து வர எல்லாப் பக்கங்களுக்கும் ஆட்கள் அனுப்பப்பட்டு இருக் கிருர்கள்

சங்கமித்திரை : போகுமுன் பிரசங்கம் (சேடிகளேப் பார்த்து) வாங்கடீ, போவோம்.

(போகிருர்கள்)

## காட்சி. 13.

காலம் : காலே.

இடம் : பாடலிபுரம்—அரண்மனே, விசாலமான அறை.

இருப்போர் : அசோகன், ரதகுப்தர், சங்கமித்திரை, சங்க மாலே, தளபதி . . ..

(கலிங்க நாட்டில் இருந்து கவர்ந்துவரப்பட்ட ஆணிப்பொற் கலசங்களும் ரவியன்ன நல்வயிரத் தின் மகுடங்களும் மாணிக்கக் குவியல்களும் பச்சை மரகதத்திரளும், நன் முத்துக்களும், சந்த னம் அகில் வகைகள், ஏலம், கர்ப்பூரம் நறும் இலவங்களும் பாக்கு நற்சாதிவகை, சேலேகள் நூறு வண்ணம் பல சித்திரத் தொழில்வகை சேர்ந்த

னவாய், வெந்நிறப் புலித்தோல்கள், பல வேழங்கள் ஆடுகள் இவற்றுடைத்தோல் தந்தத்தில் கட்டில்களும் குவித்துவைக்கப்பட்டு இருக்கின்றன. அசோகன், ரதகுப்தர், சங்கமித்திரை, சங்கமாலை ஆகியோர்க்குத் தளபதி ஒருவன் ஒவ்வொன்ருக எடுத்துக்காட்டி விளக்கிச் சொல்லிக்கொண்டே முன்னல் செல்கிருன். அப்போது சங்கமித்திரை முத்துமாலை எடுத்து, தந்தையிடம் அளவிடமுடியாத ஆச்சர்யத்தோடு காட்டுகிருள்)

சங்கமித்திரை : அப்பா ! இந்த முத்துமாலை எவ்வளவு அழகாய் இருக்கிறது ?

தளபதி : (குறுக்கிட்டு, பணிவான குரலில்) இளவரசி ! கலிங்க வணிகப் பிரமுகர் ஒருவர் வீட்டில் இருந்தும் இவைகள் கொண்டுவரப்பட்டன. இந்த முத்துமாலையை அந்த வணிகர் வளமார் தமிழகத்தில் இருந்தும் வாங்கிவந்ததாகச் சொல்லக் கேள்விப்பட்டேன்.

சங்கமித்திரை : தமிழகத்திலிருந்தா ?

தளபதி : ஆமாம் தேவி சுருவுக்கும் சுழலுக்கும் இடையில் ஆழ் கடலில் மூச்சடக்கி முதன்முதலாக முத்தெடுத்த பெருமை பெற்றது தமிழகம். மூன்றுபக்கம் கடலால் சூழப்பட்ட தமிழகத்தில் நடைபெறும் முக்கிய தொழில்களுள் முத்துக் குளித்தலும் ஒன்ருகும். உலகத்தின் சில நாடுகளில் முத்துக்கள் கிடைக்கின்றன என்ருலும் தமிழ்நாட்டில் கிடைக்கும் முத்துக்களுக்கு மிக்க மதிப்பு உண்டு.

அசோகன் : சங்கமித்திரை ! பொருட்காட்சிக்கு போவதால் பொழுதுமாத்திரம் போகவில்லை; பொது அறிவும் வளருகிறது இல்லையா ? இவைகளை எல்லாம் நீ பார்க்க வேண்டும்; ஒவ்வொன்றைப்பற்றியும் நீ நன்ருகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இங்கே உன்னை அழைத்து வந்தேன். படிப்பதைவிட, கேட்பதைக் காட்டிலும் பார்ப்பது மிக்க பயனுள்ளதம்மா ! பார், கண்ணைப் பறிக்கும் இந்தப் பட்டாடைகளை! எவ்வளவு வேலைப்பாடு !

(சங்கமித்திரை பார்த்துக் கொண்டே வரும் பொழுது வேலைப்பாடுகள் நிறைந்த பொன்வளையல்கள் அவள் பார்வையில் படுகிறது. அதை எடுத்துப் பார்க்கிறாள் அவள்.)

தளபதி : (குறிப்பறிந்து) கலிங்கப் பெண்ணொருத்தியிடம் இருந்து இது கைப்பற்றப்பட்டது . . .

(வளையல்களோடு சேர்த்துக் கட்டிவைக்கப்பட்டு இருந்த ஒரு குறிப்பை சங்கமித்திரை உரக்க வாசிக்கிறாள்)

சங்கமித்திரை : (படிக்கிறாள்) "கலிங்க நாட்டுப் படைத் தளபதி நந்திதேவனின் மனைவி வித்தியாவதி என்பவரிடம் இருந்தும் இது கைப்பற்றப்பட்டது.

தளபதி : கொஞ்சத்திலா இதை அவள் கொடுத்தாள்......

(சங்கமித்திரை மனக்கண் முன்னால் ஒரு பெண்ணை பாடலிபுரத்தைச் சேர்ந்த படைவீரர்கள் பலாத்காரம் செய்வதைப் போலவும் அந்தச் சமயத்தில் அவளுடைய கணவன் அங்கு வரவே வீரர்கள் வெறிகொண்டு அவனைக் கொன்று விடுவதுபோலவும், அலறி ஓடும்போது அவள் கரத்தை ஒருவன் சட்டென்று வெட்டிவிடுவதுபோலவும், வெட்டப்பட்ட கரத்திலிருந்தும் சரசரவென்று அந்தப் பொன் வளையல்கள் கழன்று தரையில் விழுந்து சத்தத்தை எழுப்புவது போலவும், அவள் சவமாகிச் சாய்வதைப் போலவும், வீரர்கள் அந்த வளையல்களோடு வீட்டையும் சூரையாடி அணி மணிகளையும் அபூர்வ ஆபரணங்களையும் கைப்பற்றிக் கொண்டு ஓடுவதைப் போலவும் காட்சிகள் தோற்றமளிக்கின்றன. "வெற்றி விழா இம்சையின் சின்னமாகவே விளங்கும்" என்று உபகுப்தர் உபதேசித்ததும் சங்கமித்திரையின் காதுகளில் ஒலிக்கின்றன. . ......! குழம்பிப்போய் அவள் நின்றுகொண்டிருக்கிறாள்.)

தளபதி : இளவரசி! (கையிலிருந்த ஒன்றைக் காட்டி) இந்தச் சந்திர ஹாரம்......

சங்கமித்திரை : (குழம்பிய மனதோடு) போதும் போதும் பார்த்தது. அப்பா! வாருங்கள் போகலாம்.

(என்று சொல்லிக்கொண்டே பதிலையும் எதிர் பாராமல் வேதனை கவிழ்ந்த முகத்தோடு வெளி யே செல்கிறாள்

அசோகனும் மற்றவர்களும் ஆச்சர்யத்தோடு சங்க மித்திரையைப் பின் தொடர்ந்து போகிறார் கள்.)

## காட்சி 14.

காலம். இரவு.

இடம். சங்கமித்திரை அறை.

இருப்போர் : சங்கமித்திரை, சங்கமாலை, பணிப்பெண்கள்.

(ஆழ்ந்து யோசித்த வண்ணம் மஞ்சத்தில் சங்க மித்திரை அமர்ந்திருக்கிறாள். பணிப்பெண் ஒருத்தி உள்ளே வந்து தீபங்களை ஏற்றிவைத்து விட்டு, வணங்கி வெளியே செல்கிறாள். பக்கத்தில் பழத் தட்டுகளும் பால் கிண்ணமும் வைக்கப்பட்டு இருக்கின்றன. சங்க மாலையும் சில பணிப்பெண் களும் அங்கு வருகின்றனர். அந்தக் காலடி யோசை கேட்டு சங்கமித்திரை தலை குனிந்து இருந்தவள் மெல்லத் தலையைத் தூக்கிப் பார்க்கி றாள்)

சங்கமாலை : இளவரசி! காலையில் இருந்து ஒரு மாதிரியாகவே இருக்கிறீர்களே, ஏன் அப்படி ?

(மௌனமாக இருக்கிறாள் சங்கமித்திரை).

உண்ணாவிரதத்துடன் மௌன விரதமும் இருக்கிறீர்களா ?

(சேடியர்கள் சிரிக்கிறார்கள்)

கனவில் யாரேனும் வந்தார்களா? காணுத சுகத்தைத் தந்தார்களா ?

(குரலை மாற்றிக்கொண்டு) சகியே! (பாடுகிருள்)

தூண்டிற் புழுவினைப்போல்—சகியே
சுடர் விளக்கினைப்போல்
நீண்ட பொழுதாக—எனது
நெஞ்சந்துடித்ததடீ!
கூண்டுக்கிளியினைப்போல்—தனிமை
கொண்டு மிகவும் நொந்தேன்;
வேண்டும் பொருளை யெல்லாம்—மனது
வெறுத்து விட்டதடீ!
உணவு செல்லவில்லை;—சகியே
உறக்கங் கொள்ளவில்லை.
மணம் விரும்பவில்லை,—சகியே
மலர் பிடிக்கவில்லை,
குண முறுதியில்லை,—எதிலும்
குழப்பம் வந்ததடீ!
கணமும் உள்ளத்திலே—சுகமே
காணக் கிடைத்ததில்லை.
பாலுங்கசந்ததடி!—சகியே!
படுக்கை நொந்ததடீ!
கோலக் கிளிமொழியும்—செவியில்
குத்தலெடுத்ததடீ!
கனவு கண்டதிலே—ஒரு நாள்
கண்ணுக்குத் தோன்ருமல்,
இனம் விளங்கவில்லை,—எவனே
என்னகந் தொட்டுவிட்டான்

எண்ணும் பொழுதிலெல்லாம்—அவன்கை
இட்ட விடத்தினிலே
தண்ணென்றிருந்ததடீ!—புதிதோர்
சாந்தி பிறந்ததடீ!
எண்ணியெண்ணிப் பார்த்தேன், அவன்தான்
யாரெனச் சிந்தை செய்தேன்,...

சங்கமித்திரை: போதும் உங்கள் பரிகாசம், போங்களடீ.

சங்கமாலை: மௌனவிரதம் முடிந்துவிட்டது. உண்ணுவிரதத்தையும் விட்டுவிட்டால் நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைவோம். தேவி! எதற்காக இந்த விரதங்கள்? எங்களிடம் தெரிவிக்கக் கூடாதா?

சங்கமித்திரை: ஒன்றுமில்லையடி.

ஒருத்தி: ஏனம்மா மறைக்கிறீர்கள்.

மற்றொருத்தி: அகம் மறைக்கலாம், ஆனுல் முகம்?

சங்கமாலை: (தட்டிலே கிடந்த பழவகைகளைப் பார்த்துக் கொண்டே) ஏன், நீங்கள் ஒன்றுமே சாப்பிடவில்லை? (பால் கிண்ணத்தைக் கொண்டு வந்து) இந்தாருங்கள், முதலில் இந்தப் பாலையாவது குடியுங்கள்.........

சங்கமித்திரை: வேண்டாமடீ! அதை அங்கேயே வைத்துவிடு. எனக்குப் பசி இல்லாமல் இருந்தும் கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் தட்டிலே கிடந்த பழவகைகளை எச்சிற்படுத்தி வைத்தேன். (எழுந்து நடந்து கொண்டே) ஆனுல்......

ஒருத்தி: ஆனுல் என்னம்மா?

சங்கமித்திரை: இங்கே விலையுயர்ந்த பழவகைகள் இருக்கின்றன.

ஒருத்தி: ஆமாம்.

சங்கமித்திரை: ஆனுல் வெளியே?

சங்கமாலை: வெளியே?

சங்கமித்திரை : இந்தப் பழவகைகளைத் தம் வாழ்நாளில் ஒருமுறை கூட சுவைத்துப் பார்க்காதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இங்கே இருப்பவர்கள் உணவுக்கு வயிற்றைத் தேடுகிறார்கள். ஆனால் வெளியே? தங்கள் வயிற்றுக்கு உணவைத்தேடும் தரித்திரர்களாயிருக்கிறார்கள்!

ஒருத்தி : என்னம்மா சொல்கிறீர்கள்?

சங்கமித்திரை : நான் மலர் தூவிய மஞ்சத்தில் படுத்திருக்கிறேன். பட்டு மெத்தையின்மீது பன்னீர் சொட்டும் ரோஜா மலர்கள் பரப்பப்பட்டு இருக்கின்றன. படுத்ததும் உறங்கப் பாங்கியர் வீணையை மீட்டிப் பாடுவார்கள்—ஒரு பக்கம்! அடுத்தொரு பக்கத்தில்—அரண்மனை அழகிகள் ஆடுவார்கள்! அவ்வளவும், இங்கே—அரசிளங்குமரி உறங்கவேண்டுமே என்ற ஆர்வத்தால்! ஆனால் வெளியே?...

ஒருத்தி : வெளியே?...

சங்கமித்திரை : சுற்றிலும் சுவரில்லாமல் மேலே கூரை இல்லாமல் பாதையின் இரு பக்கங்களிலும் உள்ள நடைபாதையில்—மண்ணிலே, புழுதியோடு—ஈரத்தோடு—புழுவோடு புழுவாக, பகல் முழுவதும் ஒரு சாண் வயிற்றுக்காக—உறங்கவோர் ஒரு மூலைக்காக, உடுக்க ஒரு முழத் துண்டுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த பாட்டாளி மக்கள்—பாலுக்கு அழுதழுது சற்று நேரத்திற்கு முன்புதான் கண்ணயர்ந்த பச்சிளங் குழந்தைகளோடு படுத்துறங்குகிறார்கள்! அங்கே விருந்தில்லை! வீணையின் நாதமில்லை! வேதனை! எங்கும் வேதனை....

சங்கமாலை : புதிய போக்கில் இருக்கிறது உங்கள் பிரசங்கம்....

சங்கமித்திரை : சங்கமாலை! இதோ, விண்ணிலே விளையாடும் இந்த வெண்ணிலவு மாடமாளிகை என்றும் மண்குடிசை என்றும் பாராமல் குளிர்ச்சி நிறைந்த தனது பொற்கிரணங்களை எவ்வளவு அழகாக வீசிச் செல்கிறது, பார்!...இந்த பூமி, ஏழைகளை—அந்த எலும்புக் கூடுகளைச் சுமக்கும் இந்த பூமி என் போன்ற அரச பரம்பரையினரையும் சுமக்கத்தானே செய்

கிறது? இந்தப் பரந்த உலகத்தில் என்னைப் போன்ற ஒரு சிலர் மாத்திரம் எடுபிடிகளோடு எல்லாவித வாய்ப்பும் வசதிகளோடும் வாழ—ஊருக்கு உரியோராக, உதார புருஷராக, உபதேசியராக உலவிட—ஏழைகள், உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள், உலகத்தில் பெரும்பான்மையோராகிய அந்த உயிரோவியங்கள் உருக்குலைகிறார்கள். ஒரு பக்கத்தில் சுக போக வாழ்க்கையையும் மறுபக்கத்தில் சொல்லொணா வறுமையையும் வைத்துப் போற்றும் இன்றைய சமுதாய அமைப்பு மாறினாலொழிய வாழ்வில் வளர்ச்சியும் இல்லை; மலர்ச்சியுமில்லை. உழுது பல தொழில் செய்து உழைப்போர் எல்லாம் உருகிவாட, உரிமை சிறிதும் இன்றி ஊரைப் பறித்து உண்டு, உழைப்பின்றிச் சுகித்திடும் உலுத்தர் நிரம்பிய இன்றைய உலக அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டால் ஒழிய மக்களுக்கு மகிழ்ச்சியில்லை....

சங்கமாலை: பசிக்கும்போதுதானம்மா புரட்சியே பிறக்கிறது. தேவி! வேடிக்கையாக மாத்திரம் அல்ல; இன்றைக்கு நீங்கள் விநோதமாகவும் பேசுகிறீர்கள்.

(வீதியில், வெற்றி விழாவைச் சிறப்பிக்கும் வகையில் வாணவேடிக்கைகளோடு ஒரு ஊர்வலம் அந்த வேளையில் வருகிறது. சங்கமித்திரையைத் தவிர மற்ற பெண்கள் மாடங்களில் நின்று கொண்டு ஊர்வலத்தைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள். சங்கமித்திரை யோசித்தவண்ணம் உலவிக் கொண்டிருக்கிறாள்.

## காட்சி 15

காலம்: இரவு

இடம்: பாடலிபுரம்.

(அரண்மனை நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. விளக்கு வரிசைகளால் மாளிகை பேரழகுபெற்று விளங்குகிறது. விருந்தும் விளையாட்டும் கேளிக்கையும் கோலாகலமும் இசையும் இன்பமுமாக எங்கும் இருக்கிறது.)

## காட்சி 16

காலம் : காலை.

இடம் : அரண்மனை, விழா மண்டபம்.

இருப்போர் : அசோகன், அமைச்சர், அவையினர், அரண்மனை ஆடலழகிகள்.

(அரியாசனத்தில் மகிழ்ச்சியோடு மன்னன் அசோகன் அமர்ந்திருக்கிருன். நடனம் நடைபெறுகிறது.)

அசோகன் : (தனக்குள்) சங்கமித்திரை ஏன் இன்னும் சபைக்கு வரவில்லை ?

(சிறிது பொறுத்து, வெளிப்படையாக)

அமைச்சரே ! இளவரசி ஏன் இன்னும் வரவில்லை ?

(அமைச்சர் ரதகுப்தர் ஒரு பணிப்பெண்ணைத் தன் அருகில் அழைத்து அவள் காதுகளில் மட்டும் கேட்கும்படியாக ஏதோ சொல்லி அனுப்புகிருர்.... சிறிது நேரம் செல்கிறது.)

அசோகன் : (ரதகுப்தரிடத்தில்) அமைச்சரே ! இளவரசியை அழைத்துவரப் பணிப்பெண்கள் பறந்தார்களே, அவர்கள் எல்லாம் என்னவானுர்கள் ? வெற்றி விழாவிலே சங்கமித்திரை இல்லாமையால் என் மனம் வெறிச்சென்று இருக்கிறது.

ரதகுப்தர் : பெண்கள் இயற்கையாகவே தங்களை அலங்கரித்துக் கொள்வதில் அதிக நேரம் செலவிடுபவர்களாக இருக்கிருர்கள் ! அதிலும் விழா போன்ற காலங்களில் அவர்கள் எடுத்துக் கொள்ளும் கவனத்திற்கும் காலத்திற்கும் அளவே இருப்பது இல்லை !

(அந்த பதிலில் அமைதி அடையாதவன்போல் காணப்படுகிருன் அசோகன். ரதகுப்தர் அதைக் கவனித்துவிடுகிருர்.)

நான் சென்று பார்த்து வருகிறேன்.

(போகிருர்.)

(கொஞ்ச நேரம் கழிகிறது)

அசோகன் : (தனக்குள்) எங்கே ஒருவரையும் காணவில்லை. இளவரசியை அழைத்துவரச் சென்றவர்கள் என்னவானுர்கள்? என்ன நடந்தது ? என்ன நடந்துவிட்டது ? வெற்றி விழா விலே கலந்துகொள்வதைக் காட்டிலும் சங்கமித்திரைக்கு வேறு முக்கியமான வேலை என்ன வந்துவிட்டது ? நானே சென்று பார்க்கிறேன்.

(நடனம் முடிகிறது. நாட்டியக்காரிகளுக்கு அன்பளிப்பாகத் தங்க மொகராக்களைக் கொடுத்து முடிந்ததும் அசோகன் எழுந்துபோகிருன் அவசரமாக ; அவை கலைகிறது.)

## காட்சி 17

காலம் : பகல்.

இடம் : வீதி.

(வெற்றி விழாவைக் குறித்து குதூகலமாக மக்கள் உரையாடிச் செல்கிருர்கள்.)

## காட்சி 18

காலம் : பகல்.

இடம் : சங்கமித்திரை அறை.

இருப்போர் : சங்கமித்திரை, அசோகன், ரதகுப்தர், சங்கமாலை, பணிப்பெண்கள்.

(சங்கமித்திரை சந்நியாசினி கோலத்துடன் காணப்படுகிருள். தோழியர்கள், அமைச்சர் ரதகுப்தர் ஆகியோர் அருகில் நிற்கின்றனர். அசோகன் வருகிருன். அரசனைக் கண்டதும் அமைதியாக விலகி நிற்கிருர்கள் அனைவரும்)

அசோகன் : (திடுக்கிட்டு) என்ன இது ! ஆளப் பிறந்தவள் ஆண்டிபோல் உடைதரித்து நிற்கிருளே, ஏன் ? (அருகில் வந்து) சங்கமித்திரை ! என்னம்மா இதெல்லாம் ?

சங்கமித்திரை : அப்பா! எனக்கிந்த அரசவாழ்வு பிடிக்கவில்லை. தனிமையில் சாந்திபெறும் துறவற வாழ்வே பிடித்திருக்கிறது...

சங்கமாலை : என்ன ?

ரதகுப்தர் : இளவரசி ! முற்றும் துறந்த முனிவர்களைப்போல் தாங்கள் பேசுவது நன்ருக இல்லை. வாழ ஆசைப்படும் வயது இது...

சங்கமித்திரை : அமைச்சரே ! சகலமும் அறிந்த தாங்களே இவ்வாறு பேசுவது எனக்கு வியப்பை அளிக்கிறது. வாழ்க்கையை இந்த வயதில்தான் துறக்கவேண்டும் என்பதில்லை.

அசோகன் : சங்கமித்திரை ! விளையாட்டிற்காகக்கூட இப்படியெல்லாம் சொல்லாதே ! வேதாந்திபோல் வேஷமணிந்து எந்தன் விலாப்புறத்தைக் கொந்தாதே ! கண்ணுடிக் கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீர்த்துளிகளைக்காட்டி என் மனதைப் புண்ணுக்கிப் போடாதே !...சொல், சங்கமித்திரை, சொல். படுமோசம் செய்து உன் பரிசுத்தமான மனதைப் பாழ்படுத்திவிட்ட பாவிகளைச் சொல். அவர்களை என்ன பாடுபடுத்துகிறேன் பார் !...

சங்கமித்திரை : அப்பா ! அதிகாரத்தாலும் படை பலத்தாலும் உலகை நீண்ட நாள் ஆள முடியாது. அரசும் அதிகாரமும் நிலையற்றவை. மென்மேலும் துன்பங்களுக்கே ஏதுவானவை. ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படையானவை. ஆகவே, ஆசையை ஒழிக்கவேண்டும். அன்பை வளர்க்க வேண்டும். நம்போல் பிறரை எண்ணி நல்ல உதவிபுரிய வேண்டும். இனம் அறியாமலும் ஆசாபாசத்திலும் சிக்கித் தவிக்கும் சகோதர சகோதரிகளுக்கு என் சேவையை அர்ப்பணிக்கச் செல்கிறேன். விடை கொடுங்கள்....

அசோகன் : மகளே இதென்ன மாற்றம் ? ஆளப்பிறந்த நீ ஆண்டிபோல் அலையவேண்டுமென்று ஆசைப்படுகிருய். சங்கமித்திரை ! ஆணிப் பொன்மேனி அதில் கிடக்கும் நல்லொளியைக் காணிக்கை நீ வைத்தால் காப்பரசர் வரக் காத்திருக்கிருர்கள் ! பட்டாளச் சக்கரவர்த்தி பார்த்தாலும் உன்

கட்டாணி முத்துக்காலில் விழக் காத்திருக்கிருர்கள். சௌந்தர்ய தேவதையே ! சந்திரவதனமே ! சந்நியாசினியாகத்தான் போவேன் என்று சாதிக்கிருய் ?...சொல்வதைக் கேள்.

**சங்கமித்திரை :** அப்பா, இந்த அரண்மனையையும், ஆடம்பர வாழ்க்கையையும் அடியோடு வெறுக்கிறது என் மனம். வேறு எதைப் பற்றியும் எண்ண என் மனம் இடங் கொடுக்கவில்லை. சீக்கிரம் இந்த பந்த பாசங்களை எல்லாம் விட்டுச் சென்றுவிட வேண்டும் என்னும் எண்ணமே என் உள்ளத்தில் நிரம்பி நிற்கிறது.

**ரதகுப்தர் :** தேவி ! யோசித்துச் சொல்லுங்கள்.

**சங்கமித்திரை :** அமைச்சரே ! இனி யோசனை செய்வதற்கு ஒன்றும் இல்லை.

**அசோகன் :** சங்கமித்திரை...

**சங்கமித்திரை :** அப்பா ! வாதம் வளருகிறதே என்று நான் வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள். வாழ்க்கைப் பந்தங்களும் இவ்வுலக ஆசாபாசங்களும் விரித்திருக்கும் வலையில் இனி ஒருபோதும் நான் விழமாட்டேன். தந்தையோ, தமரோ இந்த தரணி மாந்தரோ இனி எனக்கு இதில் தடையாய் இருக்க முடியாது.

**அசோகன் :** பிள்ளைக் கனியமுதே, பேசும் பொற் சித்திரமே என்றெல்லாம் பிரியமாய் பேசி, அள்ளி அணைத்திட அசோகனுக்கு இனி யார் இருக்கிருர்கள், சங்கமித்திரை ?

**ரதகுப்தர் :** தெரியாமல் யாரேனும் தங்களுக்குத் தீங்கு செய்துவிட்டார்களா ? திக்கற்றவர்களாக்கி விட்டீர்களே ! சற்று உங்கள் முகம் சிவந்தாலும் சக்கரவர்த்தி சஞ்சலமடைவாரே ! (அசோகனைக் காட்டி) பாருங்கள் தேவி, பாருங்கள் !

**சங்கமாலை :** தேவி ! தேனை மறக்குமோ வண்டு ? வானை மறக்குமோ பயிர் ? சங்கமித்திரை இல்லையென்ருல் சந்திரனில்லா இரவாகிவிடுமே மௌரிய சாம்ராஜ்யம் ! துரும்பாகித் துடிக்கிருேம் ; நீங்கள் இரும்பாய் இருக்கலாமா ? பாருங்கள். எங்களை எல்லாம் ஒருமுறை ஆசையோடு கூப்பிடுங்கள்....

சங்கமித்திரை : ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படை. வயல்களுக்குத் தீமை—களைகள் ! மனித வர்க்கத்திற்குத் தீமை—ஆசை ! ஆசை முழுவதும் விட்டேன். மணிமகுடம், மாளிகை வாசம், மன்னர் நேசம், பாங்கியர் பாசம் யாவும் மறந்தேன். பொறுமையைப் போற்றுவேன். பிறவியில் உயர்வு தாழ்வு பேசும் பேதமையை ஒழிப்பேன்.

ஏதகுப்தர் : ஊரை எழுப்பிவிட உறவை எல்லாம் மறந்து நாங்கள் எல்லோரும் உருகிவாட மாளிகையில் இருந்தும் ஓடி மறைய மனந்துணிந்திருப்பதுதகுமா ? தர்மந்தானா ? எங்கே செல்கி றீர்கள் ? ஏன் செல்கிறீர்கள் ?

சங்கமித்திரை : பெற்ற வாழ்க்கையும் பேணிய அன்பும் புவியில் உள்ள அனைவர்க்கும் பொதுவாக்கிவிட்டேன். வேளைக்கு வேளை—தெருத் தெருவாகத் திரிந்து பெற்ற பருக்கையை உண்டு பட்டினி போக்குவேன். புழுதி நிறைந்த இந்த பூமி எனக்குப் பழுதில்லாத பஞ்சணையாகும் . . . .

அசோகன் : அப்படி எல்லாம் சொல்லாதே ! சொல்லால் எங்களைக் கொல்லாதே. ஆளப் பிறந்தவள் நீ ! ஆண்டி கோலம் பூண்டு அலைவானேன் ? பணிசெய் பள்ளர் பறையர் அணியும் துணியோடு தெருத் தெருவாகத் திரிவானேன் ? பாடலிபுரம் உன்னால் அல்லவோ பேரும் புகழும் பெறுமென்று எண்ணி இருந்தேன். பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டதே.

சங்கமாலை : தேவி ! கேட்கிறதா மன்னர் ஓலம் !

ஏதகுப்தர் : இன்னும் ஏன் இந்தக் கோலம் ?

அசோகன் : இப்படியும் உன்னைக் காண எனக்கும் வந்ததே காலம் !

சங்கமித்திரை : அழுகையோடு தொடங்கி அழுகையோடு முடியும் இந்த வாழ்க்கையிடம் நமக்குத்தான் எவ்வளவு பற்றுதல் ? அறியாமையினாலா ? அறியாமைதான் துர்ப்பாக்கியத்தின் ஆணிவேர் ? அறியாமையின் காரணமாக அழுது புலம்பி அரற்றும் புவி மகிழ்ந்துவாழ, அறவழி காணவே நான் ஆண்டியானேன். தட்டினால்தானே கதவு திறக்கும். போட்ட இடத்தில் தேடினால்தானே பொருள் கிடைக்கும்.

ரதகுப்தர் : கேட்டால்தான் கொடுப்பார்கள் என்பதெல்லாம் உண்மைதான். ஆனல்,

சங்கமித்திரை : ஆனலென்ன ?

ரதகுப்தர் : விரும்புவது எதுவோ அதை நீங்கள் அரண்மனையில் இருந்துகொண்டே சொல்லலாம் அல்லவா ? செய்ய வேண்டியது எதுவோ அதை அரண்மனையில் இருந்தபடியே, அவசியமானல் அரச அதிகாரங்கள் அத்தனையும் பயன்படுத்திச் செய்யலாம் அல்லவா ? அற்பகாரியங்களுக்காக எல்லாம் ஆண்டியாவதா ? தேவி ? இது அறமுமல்ல; ஆக்கமும் அல்ல. (கழுத்தில் இருந்த பொன்னுபரணம் ஒன்றைக் காட்டி) மாளிகையில் இருப்பவர் சொன்னலும் இது தங்கந்தான் ! மரத்தடியில் இருப்பவர் சொன்னலும் இது தங்கந்தான் !

சங்கமித்திரை : உண்மைதான் அமைச்சரே ! சொல்லொன்றும் செயல் வேருகவும் இருந்தால் அது சோபை இழந்துவிடும் என்பது தாங்கள் அறியாததா ? மணிமாடத்தில் நான் இருந்தபடி " மக்களே ! வானளாவிய மாளிகையும் வேண்டுமா, வாழ்வதற்கு ?" என்று சொன்னல் எவர் அதனை மதிப்பர் ? பட்டும் பரிமளமுமிட்டு, படை முன்னும் பின்னும் அணிசெய்ய நான் பவனிவந்து, எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்தது. ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை. எல்லோரும் சமம். எளிய வாழ்வு வேண்டும்; எவர்க்கும்" என்று சொன்னல் ஏன் கேட்பர் ? எவர் கொள்வர் ? ஊருக்கு உபதேசம் தனக்கில்லை என்ற இழிமொழிக்கு நான் உள்ளாகலாமா ? சொல்லுவதைப்போல செய்யவேண்டும்; செய்வதைப்போல சொல்லவேண்டும். அந்த உண்மை வழி ஆரம்பத்தில் கஷ்டமும் ஆபத்தும் நிரம்பியதாக இருந்தாலும் முடிவில் நிச்சயமாகச் சுகத்தையும் இன்பத்தையும் அளிக்கும் தந்தையே ! என் எண்ணம் நிறேவேற தடையேதும் செய்யாமல் ஆசிகூறி அனுப்புங்கள் . . . .

(அசோகன் பாதங்களைத் தொட்டு வணங்குகிருள்)

அசோகன் : (கண்ணீர்விட்டுக் கலங்கியபடி) "பெற்ற மனம்பித்து; பிள்ளைமனம் கல்லு" என்று தெரியாமலா சொல்லி இருக்

கிறார்கள் பெரியவர்கள்! நீ என் கண்ணன்றோ! இந்த நினைப்பை அகற்றிவிடு. .துன்பக்குழியில் என்னைத் தள்ளாதே. செல்வமே! சொல்வதைக்கேள். வா . . .எனக்கு வாழ்வா தா!

(சங்கமித்திரை கால்களைப் பிடிக்கக் குனிகிறாள்)

சங்கமித்திரை: (பதறி) இதெல்லாம் என்ன? (அழுதபடி) தந்தையே! கண்ணீர்த்துளிகளைக் காட்டி, பெற்ற பாசத்தால் கட்டிப்பிடித்து, கல்லாகி விட்ட என் மனதைக் கரைக்க முயற்சிக்காதீர்கள். . .கொண்ட உறுதியைக் குலைக்காதீர்கள். பொய்யும், புரட்டும், களவும், கொலையும், வாதும், சூதும் நிரம்பிய ராஜபோக வாழ்க்கைக்கு இனி ஒருபோதும் நான் திரும்பப் போவதில்லை. தந்தையே! கோடிக்கணக்கான இதயங்களில் குமுறி கொந்தளித்திருக்கும் ஆசாபாசங்களை அடக்கி ஆள ஆன்மீக பலத்தை வளர்க்கும் அரும்பணியை நான் மேற்கொண்டு இருக்கிறேன். நான் மேற்கொண்டிருக்கிற முயற்சியில் வெற்றிபெற உங்கள் அனைவருடைய அன்பும் எனக்கு வழிகாட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன் (வணங்கி) வருகிறேன்.

(செல்கிறாள்)

அசோகன்: ஏழையரைக் கொல்ல எதிரிருந்து பார்த்திருப்போர் பாழான நெஞ்சம் சில சமயம் பார்த்திரங்கும். சித்தம் துடிக்கின்ற எந்தன் நிலைமைக்குப் பித்தம் கொண்டலையும் எந்தன் பெண்ணின் மனம் ஏனிரங்கும்?

(சக்கரவர்த்தி அசோகன் மயக்கமடைந்து மஞ்சத்தில் சாய்கிறான். பக்கத்திலிருந்தோர் பரபரப்படைகின்றனர்)

சங்கமித்திரையின் குரல்:

சாமிசரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி

தர்மம் சரணம் கச்சாமி

## காட்சி, 19.

காலம் : காலை.

இடம் : ஆற்றங்கரையோரம்

இருப்போர்! சில பெண்கள், செங்கமலம்

(இடுப்பில் நீர்நிறைந்த குடத்துடன் சில பெண்களோடு செங்கமலம் வந்து கொண்டிருக்கிருள். எதிரில் அவள் தோழி வருகிருள்...)

தோழி : செங்கமலம் உனக்குச் சேதி தெரியுமா? இளவரசி சங்கமித்திரை சந்நியாசினியாகப் போய்விட்டாராமே ?

("ஆ" என அலறியபடி செங்கமலம் இடுப்பில் இருந்த குடத்தை இந்த அதிர்ச்சியில் விட்டுவிடுகிருள். குடம் கீழே விழுந்து உடைந்து தண்ணீர் அவள் கால்களை நனைத்துக்கொண்டு ஓடுகிறது.

## காட்சி. 20.

காலம் : பகல்.

இடம் : வீட்டுத்திண்ணை.

(சிலர் உட்கார்ந்து பொழுதுபோக்காகப் பேசிக் கொண்டு இருக்கிருர்கள்.)

ஒருவன் : சக்கரவர்த்தியும் மந்திரியும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்களாம். ஆனல் இளவரசி ஒன்றுக்கும் அசைய வில்லையாம்.

மற்ரெருவன் : இதெல்லாம் இந்தக்கால அதிசயமப்பா !

இன்னெருவன் : அதிசயமாய் இருந்தாலும் சரி, அவதாரமாய் இருந்தாலும் சரி; இதிலே எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை வீண் புரளி.

ஒருவன் : புரளியுமில்லே, சரளியுமில்லே. கடவுள் கொடுத்திருக்கிற இந்த ரெண்டுகண்ணுலே காலம்பற நானே பார்த்தேன். பிக்ஷிணிக் கோலத்திலே சங்கமித்திரை சம்பா நதிக்கரையோரமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

அந்தணர் : . . .ம் . . .உலகம் வரவர கெட்டுப்போவுது. (தலையில் அடித்துக்கொண்டே) கிரகசாரம் ! கிரகசாரம்

(எழுந்து போகிறார்)

## காட்சி 21.

காலம். காலை.

இடம். தக்ஷசீலம்—அரண்மனை, ஓர் அறை.

இருப்போர். மிகிரகுலன், ராகுலன்.

(தக்ஷசீலச் சிற்றரசன் மிகிரகுலன் கண்ணாடிமுன் நின்று வாய்க்குள் ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டே தன்னை அலங்கரித்துக் கொள்கிறான். அவன் தம்பி ராகுலன் வருகிறான் அங்கே)

மிகிரகுலன் : (கண்ணாடி மூலம் ராகுலன் தன்னிடம் வருவதைக் கண்டு) வா, ராகுலா!

ராகுலன் : அண்ணா! என் வார்த்தையைச் சிறிது கவனித்துப் பார்க்கவேண்டும்.

மிகிரகுலன் : பீடிகை இருக்கட்டும் ராகுலா, விஷயமென்ன! உன் வார்த்தையைக் கவனிக்காமலா ?

ராகுலன் : அண்ணா! தாங்கள் பாடலிபுரம் போவதாகக் கேள்விப் பட்டேன் . . . .

மிகிரகுலன் : ஆமாம். ராகுலா! எனக்கு தெரியாமல் இன்னதென்று புரிந்துகொள்ள முடியாத ஒரு நம்பிக்கை என்னுடைய உள் ளத்தின் ஆழத்திலே பதுங்கி இருக்கிறது. சங்க மித்திரையை ஒரு முறை நான் சந்தித்தால் போதும்—சந்நியாசினி கோலத் தைக் கலைத்துக் கொண்டு விடுவாள். கள்ளமில்லாத பிள்ளைப் பருவத்தில் நாங்கள் இருவரும் குருகுலத்தில் கல்வி பயன்ற தையும், கூடியாடி குதூகலித்திருந்ததையும் பெரியவர்களான தும் நாங்கள் இருவரும் மணந்து கொள்ள வேண்டும் எனப் பேசியிருந்ததையும் நான் அவளுக்குக் கவனப்படுத்துவேன்....

ராகுலன் : அண்ணா! பிள்ளைப் பருவத்தில் பேசியதையும் செய்த தையும் பிரமாதப்படுத்தலாமா? அமைதியான இன்ப வெள்ளத்

திலே காலங் கடந்ததும் பொருளற்ற பேச்சையும் சுட்டிக் காட்டிக் கொந்தளிப்பு ஏற்படவேண்டுமென்று ஆசைப்படுவது ?

மிகிரகுலன் : என்ன சொல்கிருய், ராகுலா ?

ராகுலன் : உலக வாழ்க்கையை வெறுத்துவிட்டாள், உணர்ச்சிப் போராட்டங்களை வென்றுவிட்டாள்—சங்கமித்திரை ! நாட்டிற்குத் தேவை—நல்லதோர் சேவை ! அந்த சேவையை புத்த தேவன் போதித்த அகிம்சை வழி நின்று ஆற்ற அவள் ஆசைப் படுகிருள் . . . . அகிம்சை . . .

மிகிரகுலன் : அகிம்சையாம் அகிம்சை ! வெறும் வார்த்தை அலங்காரம் ! மனிதருள் ஒருவன் மற்றொருவனை அடக்கி ஆள ஆசைகொண்டு சூழ்ச்சியால் உற்பத்தி செய்த சுலோகம். நாளுக்கொரு ஊராகவும் ஊருக்கொரு ஆளாகவும் ஓடித்திரியும் நாடோடிகளின் வேதாந்தம் ! எளியவன் ஏற்றம் பெறுகின்ற வரையிலும் உச்சரிக்க வைத்துக் கொண்டிருக்க ஒரு மந்திரம் !

ராகுலன் : கோபங் கொண்டால் குணம் தோன்ருது . . .

மிகிரகுலன் : குணத்தை இனி உன்னிடம்தான் நான் தெரிந்து கொள்ளவேண்டும் ! ராகுலா ! என் மனதை மாற்ற முயற்சிக்கிருய் !

ராகுலன் : அல்ல, அல்ல. அவள் முள் ! நீங்கள் வாழை ! "வாழையிடம் வலியவந்து முள் வாஞ்சை காட்டினுலும் வாழைதான் அழியும் ! அல்லது, முள்ளின் மேல் வாழை மோகங் கொண்டாலும் அழிவது வாழைதான்." என்பதை எடுத்துக் காட்ட ஆசைப்பட்டேன்.

மிகிரகுலன் : என்ன சொன்னுய் ? அவ்வளவு அலட்சியமாகவா என்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிருய். மிகிரகுலன் முயற்சித்தால் முடியாத தொன்றுமில்லை. சங்கமித்திரை கொண்ட கோலத்தைக் கலைந்து என்னை மணக்கச் சம்மதிக்க வேண்டும் அல்லது சவமாக வேண்டும். இதைச் செய்யாவிட்டால் நான் மிகிரகுலனில்லை !

ராகுலன் : அண்ணு ! நான் குருடனில்லை ! அடைய முடியா பொருளின்மீது ஆசைவைத்து உன்னத லட்சியம் ஒன்றை

அழித்திட நீங்கள் வெட்டும் படுகுழியைப் பார்த்தும் நான் பது மையாய் இருக்கமாட்டேன் ! அதர்மத்தை நான் ஆதரிக்கமாட்டேன். கபடமான நியாயங்களை உண்டு பண்ணி, சிக்கலான பொய்களைப் புகுத்தி, பரிசுத்தமான ஒரு பெண்ணின் வாழ்க்கையையும் மலர்ந்து வரும் புதியதோர் மார்க்கத்தையும் அழிக்கப் பார்க்கும் உங்கள் வஞ்சக எண்ணங்களை எதிர்த்துப் போராடாமல் நான் இருக்கமாட்டேன். என் சகல சக்திகளையும் ஒன்று சேர்த்து இந்தக் கொடுமை செய்வதினின்றும் உங்களை நான் காப்பாற்றியே தீருவேன் !

(போகிருன்)

மிகிரகுலன் : (சிறிது சிந்தித்து—சிரித்தபடி) ஏருக்கு எப்படி தெரியும் எருதின் கழுத்து வலி ? பிக்ஷுக்கள் கூட்டத்தில் சேர்ந்துவிட்டான் போலிருக்கிறது இந்தப் பித்தன் ! குட்டி—உபகுப்தர் காதலித்ததுமில்லை, காதலிக்கப்பட்டதும் இல்லை.

(உலாவுகிருன்.)

## காட்சி 22.

காலம் : காலை.

இடம் :

இருப்போர் : சங்கமித்திரை, மிகிரகுலன், ராகுலன்

(புத்தர் பொன்மொழிகளை சங்கமித்திரை படித்துக் கொண்டிருக்கிருள் . . . மிகிரகுலன் வருகிருன் . .)

மிகிரகுலன் : வாழ்விலே ஒவ்வொரு மனிதனும் ஒரு புத்தகம்தான்.

சங்கமித்திரை : உண்மைதான். சில புத்தகங்களைச் சுவைத்துப் பார்க்க வேண்டும். சிலவற்றை ஒதுக்க வேண்டியதாக வரும்.

மிகிரகுலன் : சங்கமித்திரை ! ஒரு சந்தேகம். கேட்கலாமா ?

சங்கமித்திரை : சந்தேகமா ! மனதில் அதற்கு இடம் கொடுக்காதீர்கள் ; வாழ்க்கையைச் சஞ்சலத்தில் ஆழ்த்திவிடும்.

மிகிரகுலன் : (தன் கையிலிருக்கும் ஒரு ரோஜா மலரைக்காட்டிய வண்ணம்) காட்டிலே மலர்ந்துகிடந்த இந்த மலரால் யாருக்

காவது பயன் உண்டா ? இது மலர்ந்ததின் பயன்தானென்ன ? கொடியில் இருந்ததைவிட உன்னைப்போன்ற கோதை ஒருத்தியின் கூந்தலை அலங்கரிக்கும் போதுதானே இதன் அழகை நாம் வியந்து அனுபவிக்கிறோம்.

சங்கமித்திரை : ரோஜா அழகாக இருக்கிறது என்பதனால் அதனைப் பறிக்க விரும்புகிறார்களே தவிர அதன் பின்னால் மறைந்து இருக்கும் முட்களைப்பற்றி சிறிதளவாவது சிந்தித்துப் பார்க்கிறார்களா ?

மிகிரகுலன் : ரோஜா மலரைப் பறிக்க விரும்புகிறவர்கள் அதன் முட்களைக்கண்டு அஞ்சுவது அறிவுடைமை ஆகுமா ? முள்ளினால் ஏற்படும் சிறிய துன்பத்தைக் காட்டிலும் மலரை அடைவதால் ஏற்படும் இன்பம் மேலானதாக இருக்கலாம் ....

சங்கமித்திரை : (பேச்சை வளர்க்கப் பிரியப்படாமல்) இருக்கலாம் இதனாலென்ன ?

மிகிரகுலன் : எதற்காக இதை நான் சொல்ல வந்தேன் என்றால், இறைவனுக்கு நாம் பக்தியைச் செலுத்த அல்லது நம்முடைய இலட்சியம் ஒன்றை அடைவதற்காக மற்றவைகளை நாம் வெறுக்க வேண்டும் அல்லது விட்டுவிட வேண்டும் என்பதில்லை அல்லவா ?

சங்கமித்திரை : (குழப்பத்துடன்) என்ன சொல்கிறீர்கள் ?

மிகிரகுலன் : மலர் இருப்பது—மணம் நுகர. பழம் கிடைப்பது—ரசம் பருக. வீணையை மீட்டுவது இன்ப நாதம் வேண்டுமென்பதற்காகத்தான் ! அதைப்போலவே. வாழ்க்கை வாழ்வதற்காகவே அமைக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல், வெறுக்க அல்ல.

சங்கமித்திரை : உண்மைதான். ஆனால்...

மிகிரகுலன் : ஆனாலென்ன ?

சங்கமித்திரை : வாழ்வு இரண்டு வகையானது. நான் விரும்புவது தனிமையில் சாந்தி பெறும் நல்வாழ்வு.

மிகிரகுலன் : நல்வாழ்வு என்பது உலக இயற்கையில் இல்லை. அவரவர் உள்ள இயற்கையிலேதான் இருக்கின்றது. வாழ்வில் ஒவ்வொருவருக்கும் உள்ளது ஒரே ஒரு ஆசை...

சங்கமித்திரை : ஆசையா ?

மிகிரகுலன் : ஆமாம், சங்கமித்திரை ! எனக்கு...எனக்கு உள்ளது, நீ என்றென்றும் என்னுடையவளாக இருக்க வேண்டும் என்பதுதான். உண்மையாகச் சொல்லுகிறேன், இது நிறைவேறவில்லையானுல் என் உள்ளம் ஒடிந்துவிடும்...

சங்கமித்திரை : என்ன...என்ன பேசுகிறீர்கள் ?...

மிகிரகுலன் : இதயத்தோடு இதயமாக—குரலோடு குரலாக, உடலோடு உடலாக நான் இணைந்துவிட வேண்டும். எதுவும்—எதுவுமே இனி நம்மைப் பிரிக்க முடியாதபடி நாம் ஒன்றிப் போகவேண்டும். பொலிவும் வலிவும் நிறைந்த புதியதோர் வாழ்வைப் பெறவேண்டும். ஏனென்றுல், இனி நீ இல்லாமல் என்னுல் உயிரோடு இருக்க முடியாது . . .

சங்கமித்திரை ; (உரக்க—உறுதியான குரலில்) பொய் ! முழுதும் பொய்! நான் இல்லாமல் எல்லோரும் ஜீவிக்க முடியும்பொழுது உங்களால் மட்டும் ஏன் முடியாது ? கள்ளமில்லாத பிள்ளைப் பருவத்தில் ஒன்றுகப் படித்தவர்கள் என்ற காரணத்தினுல்—கடமை உணர்ச்சியினுல்தான் இங்கே உங்களைத் தங்க அனுமதித்தேன்—அதனுலேயே நான் உங்களோடு உரையாடி இருந்தேன். திசை திரும்புகிறது—உங்கள் பேச்சு. பேச்சிலே நீங்கள் வெளியிட விரும்பும் கருத்தை நான் புரிந்துகொண்டேன். சிறுவயதில்—சின்னச்சின்ன வீடுகட்டி, நாம் சிரித்துப் பேசி ஆடிப்பாடித் திரிந்ததை எல்லாம் அர்த்தமாக்கிக் கொண்டு, "காதல் புரிவோம், கணவன்—மனைவியராவோம்" என்று நீங்கள் எண்ணுவதை நான் ஏற்பதற்கில்லை. மன்னிக்கவும். வேறு விஷயமேதாவது இருந்தால் அதைப்பற்றி பேச நான் விரும்புகிறேன்.

(மிகிரகுலன் மௌனமாக நிற்கிருன். சங்கமித்திரை உள்ளே போகத் திரும்புகிருள்)

மிகிரகுலன் : (ஆத்திரமாக) எங்கே போகிருய். சிறிது நின்று நான் சொல்வதைக் கேள்.

(சங்கமித்திரையை வழி மறிக்கிருன்.)

சங்கமித்திரை : (கோபமாக) எனக்கு இந்த நாடகம் எல்லாம் பிடிக்காது. இங்கிருந்தும் நீங்கள் போகிறீர்களா , இல்லையா?

மிகிரகுலன் : உன் உடலைப்போலவே உள்ளமும் மென்மையாக இருக்கும் என்று எண்ணி வந்தேன். போகவா சொல்கிருய்! எங்கே சங்கமித்திரை ? போவதானுல் நாம் இருவரும் போக வேண்டும். வாழ்வதானுல் நாம் இருவரும் வாழவேண்டும். முதலாவதாகவும், முடிவானதாகவும் நான் கொண்டிருக்கிற எண்ணம் இதுதான். புறப்படு, ஒளிப்பிழம்பே !

(சங்கமித்திரையின் கைகளைப் பற்றும் சமயத்தில் ராகுலன் உருவிய வாளுடன் ஓடிவருகிருன்.)

ராகுலன் : அண்ணு ! கையை எடு, விடு சங்கமித்திரையை.

மிகிரகுலன் : ராகுலனு ?

(ஆத்திரத்தோடு வாளை உருவிக்கொண்டு ராகுலன்மீது பாய்கிருன். இருவரும் ஒருவரையொருவர் மூர்க்கத்தனமாகத் தாக்கிக் கொள்கிருர்கள்.)

சங்கமித்திரை : நிறுத்துங்கள், நிறுத்துங்கள்...ஐயோ...என்ன இது ?...நிறுத்துங்கள். சொல்வதைக் கேளுங்கள்...(இருவருக்கும் நடுவில் பாய்ந்து) கொல்லத்தானே வேண்டும் ; முதலில் என்னைக் கொல்லுங்கள். பிறகு, என் பிணத்தின்மீது ஏறி நின்றுகொண்டு போரிடுங்கள்...என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள் ? ஆத்திரத்தால் அறிவை இழப்பதா ? ஆறுவது சினம் அல்லவா ?

ராகுலன் : ஆரம்பத்திலேயே நான் அறிவுறுத்தினேன். "பிறரைக் கெடுக்க நினைக்காதே ; நீ கெட்டுப்போவாய் " என்றேன். என் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளவில்லை.

மிகிரகுலன் : தம்பி ! தேன் அருமை தும்பிக்கு அல்லவா தெரியும்?

சங்கமித்திரை : மலரைக் கசக்காதிருந்தால் தேன் கிடைக்காவிட்டாலும் மணமாவது கிடைக்கும் அல்லவா ? மிகிரகுலரே ! அழகாய் இருக்கிறேன் என்று என்மீது ஆசைப்படுகிறீர்கள். அழகு—அது சில நாளில் சிதைந்துவிடும் ஒரு சாம்ராஜ்யம். அழகு என்பது பெண்களுக்கு இயற்கை அளிக்கும் முதற்

பரிசு ; அவர்களிடம் இருந்து முன்னதாகப் பறித்துக் கொள்ளும் பொருளும் அதுதான். பிறந்த மேனியாய் இந்த பூமிக்கு வந்தோம். பிறந்த மேனியாகவே பூமிக்குள் போகிறோம். அந்த இடத்தை எல்லோரும் ஒரு நாளைக்கு அடைந்தே விடுகிறோம். அடடா ! இந்த உலகை ஒரே குடையின்கீழ் அரசாளப் பிறந்தவனும் அல்லவா அந்தச் சிறுகுழிக்குள் அடங்கி விடுகிறான் ? ஆனால், அதற்குள்தான் எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் ? எத்தனை சலசலப்பு ? எவ்வளவு சச்சரவு ? சின்னஞ்சிறிய பிணக்குழியே ஒவ்வொருவருக்கும் முடிவானதும் சொந்தமானதாகவும் ஆகிறபோது அறிவில்லாமல் வானமளாவிய எண்ணங்களை வைத்துக் கொண்டல்லவா வாழ்கிறோம் ?

ராகுலன் : பரிசுத்தமான உங்கள் வாழ்வுப் பயணத்தில் தடங்கற்களைப்போட அண்ணா பாடுபடுகிறார் என்பதும் நான் பதறிப் போனேன். மோக வசப்பட்டு நின்றிருந்த அவர் நிலையைக் கண்டதும் மூர்க்கனானேன்.

சங்கமித்திரை : மிகிரகுலரே ! நீங்கள் ஆசைப்படுவது என் அழகையல்ல ; இந்த இளமையை ! பலாத்காரமாக மலரைக் கசக்கி முகர முயற்சிக்கிறவர்கள் மலரின் அழகையும் மணத்தையும் அனுபவிப்பது இல்லை. இமைப்பதற்குள் அடங்கி விடும் அர்த்தமற்ற ஓர் உணர்ச்சியின் கிளர்ச்சியைத்தான் அனுபவிக்கிறார்கள்.

(மிகிரகுலனுடைய இடுப்பில் இருந்த உடைவாளை ஒரு கையில் உருவி மற்றொரு மெல்லிய கையை மிகிரகுலன்முன் நீட்டி "இதோ பாருங்கள்" என்று அந்த வாளினால் ரத்தம் வரும்படி கீறுகிறாள். இரண்டொரு இரத்தத் துளிகள் மிகிரகுலன் முகத்தில் வந்து அடிக்கின்றன.)

இரத்தம் பீறிடும் இந்தக் கையின் வேதனை என்னை எதுவும் செய்யவில்லை. ஏன் தெரியுமா ? எதையும் தாங்கும் இதயம் இப்போது என்னிடமுண்டு. உணர்ச்சியற்று, உயிரற்றுப் போனால் ஒழிய நான் உங்கள் ஆசைக்கு உடன்பட ஒப்ப

மாட்டேன். என்னை இந்தக் கத்தியால் குத்திக் கொன்று விடுங்கள். இதோ நிற்கிறேன் செய்யுங்கள். பிறகு, பிரேதமாய்ப் போன இந்த உடலின் சகல சௌந்தர்யங்களையும் அள்ளிப் பருகுங்கள்; அனுபவியுங்கள்....ம்...என்னைக் குத்திக் கொன்றுவிடுங்கள்....

**மிகிரகுலன் :** சங்கமித்திரை என்னை மன்னித்துவிடு. என்னால் உனக்கு எவ்வளவோ சங்கடங்கள்....

**சங்கமித்திரை :** நடந்தவைகள் அழிந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும். அன்பர்களே! அறிவை வளர்ப்போம். ஆசையை ஒழிப்போம். அன்பை அணிந்து தொண்டு செய்வோம்.

**ராகுலன் :** அண்ணா! என்னை மன்னித்துவிடுங்கள்.

(காலில் விழுந்து வணங்குகிறான்)

**சங்கமித்திரை :** ஒன்றுபடுங்கள். நல்லதை நினையுங்கள்; நல்லதைக் கேளுங்கள்; நல்லதையே செய்யுங்கள்.

சாமி சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி

தர்மம் சரணம் கச்சாமி

## காட்சி 23

காலம் : காலை

இடம் : மலையுச்சி

இருப்போர் : உபகுப்தர், மிகிரகுலன்.

(மலையுச்சியிலே நின்றுகொண்டு வாழ்க்கைக்கு முடிவு காண எண்ணுகிறான் மிகிரகுலன். சங்கமித்திரை இல்லாமல் தன் வாழ்வு சாரமற்றதாகப் போய்விட்டது என்று எண்ணி சஞ்சலப்படுகிறான். தலைக்குப்புற விழ இருக்கும் சமயத்தில் உபகுப்தர் அவனைத் தடுத்து நிறுத்துகிறார்...)

**உபகுப்தர் :** என்ன காரியம் செய்ய எண்ணுகிறாய்.

மிகிரகுலன் : ஸ்வாமி ! என்னைத் தடுக்காதீர்கள். வாழ்விலே எனக்குப் பந்தமுமில்லை ; பாசமுமில்லை. இனி நான் வாழ்வதற்கு வழியே இல்லை.

உபகுப்தர் : புத்ததேவன் காட்டிய புனிதப் பாதை உனக்காகத் திறந்திருக்கிறது. வா, மகனே ! வா !...

மிகிரகுலன் : ஸ்வாமி ! பரிசுத்தமான இடத்திலே இந்தப் பாபியின் பாதங்கள் படவேண்டாம்.

உபகுப்தர் : இருட்டறையில்தான் விளக்கை வைக்கவேண்டும். அழுக்குப்பட்ட பொருள்களைத்தான் சுத்தம் செய்யவேண்டும். மகனே ! ஆசை நிறைவேறாமற் போனதால் தற்கொலை செய்துகொள்வது என்ற முடிவிற்கு வந்துவிட்டாயா ? ஆசை நிறைவேறவில்லை என்பதற்காகத் தற்கொலை செய்துகொள்ளுவது என்றாகிவிட்டால் உலகம் பாதிக்குமேல் சுடுகாடாகத்தான் மாறிவிடும். அதனால்தானே, புத்ததேவன் "ஆசையை ஒழி" என்று போதித்தார். ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படை. ஆசை சிலசமயம் அறிவையும் வென்றுவிடும். ஆசைப்படாதே ; ஆசைப்பட்டாலோ அவதிப்படுவாய்...

மிகிரகுலன் : ஸவாமி...என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வீர்களா ?

உபகுப்தர் : தவறு செய்யாத மனிதன் இந்த உலகத்தில் ஒருவன் கூட இல்லை. செய்தது தவறு என்பது தெரிந்த பிறகும் திருத்திக் கொள்ளாமல் பழைய பத்தாம் பசலி பாதையிலேயே போய்க்கொண்டு இருப்பின் தீயோனாவான். மகனே ! நேற்று விழுந்துவிட்டாய். அதனால் என்ன இன்றைக்கு எழுந்து நில்....

மிகிரகுலன் : ஸ்வாமி !

உபகுப்தர் : பகவான் புத்தர்பிரானை நம்பு. அந்த அவதாரமூர்த்தியின் அருள் உன்னைக் காக்கட்டும்.

(பாடிக்கொண்டே செல்கிறார். மிகிரகுலனும் மனமாற்றமடைந்து உபகுப்தர் பின்னால் செல்ல ஆரம்பிக்கிறான்.)

உபகுப்தர் : சாமி சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி.
(மிகிரகுலனும் சேர்ந்து சொல்கிறான்.)

## காட்சி 24

காலம் : இரவு

இடம் : நாட்டியக்காரி வாசவதத்தையின் மாளிகை—ஒரு கூடம்.

இருப்போர் : வாசவதத்தா, பாணக்கியர், பட்டர், பணிப் பெண்கள்....

(பாணக்கியர் பாட, வாசவதத்தா ஆடிக்கொண் டிருக்கிறாள்.)

பாணக்கியர் :

கனவென்ன கனவே—என்றன்
கண் துயிலாது நனவினிலே யுற்ற (கன)
ஓமென்ற மொழியும்—அவன்
ஓமென்றன் மொழியும்—நீலக்
காமன்றன் உருவும், அவ் வீமன்றன் திறனும்,
அருள் பொங்கும் விழியும்—தெய்வ
அருள் பொங்கும் விழியும்—காணில்
இருள் பொங்கு நெஞ்சினர் வெருள்பொங்குந் திகிரியும்,
கண்ணனைக் கண்டேன்—எங்கள்
கண்ணனைக் கண்டேன்—மணி
வண்ணனை ஞான மலையினைக் கண்டேன். (கன)
வீரிய வடிவம்!—என்ன
வீரிய வடிவம்!—இந்த
ஆரியன் நெஞ்சம் அயர்ந்ததென் விந்தை. (கன)

(பட்டர் பிரவேசிக்கிறார்.)

பட்டர் : அநியாயம், அநியாயம். இது இந்த தேசத்துக்கு அடுக்குமா ! அல்லது தர்மத்துக்குத்தான் அடுக்குமா ?

பாணக்கியர் : ஓய் ! எதற்காகங்காணும் இப்படி ஓலமிடுகிறீர் ! அப்படி என்னங்காணும் குடிமுழுகிப்போகிற அநியாயம் நடந்துடுத்து ?

பட்டர் : இன்னுமென்ன நடக்கணுங்காணும் ? பிராமண மதம்—புனிதமானது—புராதனமானது. வேதம், ஸ்மிருதி முன்னோர்கள் ஆசாரம் இதுதான் பிராமண மதத்துக்கு பிரமாணம். அசோகவர்த்தனன் நம்மையும் நம் மதத்தையும் அலட்சியப்படுத்தி விட்டான். மன்னன் என்ற மமதையால் தன்னை மன்னனுக்கியதும் தனக்கு மதிப்பு கொடுத்ததுமான நமது புராதன மதத்தைப் புறக்கணித்து பௌத்தனுகி விட்டான் !

பாணக்கியர் :
வாசவதத்தா : } (ஆச்சரியத்துடன்) என்ன ?

பட்டர் : இந்தப் பட்டர் எதுக்குங்காணும் பொய் சொல்லணும் ! கடவுள் கொடுத்த இந்த இரண்டு காதுகளாலும் கேட்டேன். அநியாயமல்லவா ? இது அடுக்குமா ?

பாணக்கியர் : (யோசித்தவண்ணம் உலாவி) பட்டரே ! இதை முளையிலேயே கிள்ளி எறியப் பார்க்கவேண்டும். அசோக வர்த்தனனைப் போன்ற ஒரு பெரிய சக்கரவர்த்தி பௌத்தனுகி விட்டால்—மௌரிய சாம்ராஜ்யம் முழுவதும் பௌத்த மதம் பரவிவிட்டது என்றே சொல்லலாம். பௌத்தமதம் பரவபரவ நம்மவாளுக்கு லவேசமும் கௌரவம் கிடைக்காது போய் விடும் ! ஏனென்ருல், பிராமண மதத்தை நசுக்குவதற்கென்று தானே தோன்றியிருக்கிறது பௌத்தம் ?

வாசவதத்தா : அதெப்படிச் சொல்ல முடியும் ?

பட்டர் : போடீ, அசடு ! (சிரித்துக்கொண்டே) சொல்லித் தெரிவதாடீ, அதன் சூட்சமம். உதாரணத்திற்காக ஒன்றுமட்டும் சொல்கிறேன் ; இது உனக்குள் இருக்கட்டும் ! புல்லுக்குப் பஞ்சமான நாட்டிலே இருந்து புறப்பட்டுவந்த நாம் கங்கை பாயும் அகண்ட சமவெளியையும் வற்ருத ஜீவநதிகளால் வளம்

பெற்று விளைந்து இருந்த வயல்களையும் கண்ட கணத்தில் நம் முன்னோர்கள் புளகாங்கிதம் பெற்றார்கள்! இந்த நாட்டு ஜனங்களிடையே ஒற்றுமை குறைவாக இருந்ததைப் பயன் படுத்திக்கொண்டு அநாகரிகமான—ஆபாசமான—அருவெறுப் பான, ஒழுக்கக்கேடான பழக்கவழக்கங்களைத் தெய்வத்தன்மை வாய்ந்த புராணங்களாக—இதிகாசங்களாகப் புகுத்தியவர்கள் நம் முன்னோர்கள். அதனால்தான் நம் மதம் இந்த ஆர்யாவர்த் தம் முழுமையும் பரவி இருப்பதோடு, நம்மவாளுக்கு மற்றவர் —அவன் பெரிய சக்கரவர்த்தியாக இருந்தாலும் மகா அறிஞனு யிருந்தாலும் மதிப்புக் கொடுக்கணும் என்கிற தர்மம் தழைத் திருக்கு! வர்ணாஸ்ரம தர்மத்தையும் நம்மவா வளர்த்திருக்கிறா! பிரம்மா—நம்மவன்! பிரம்மன் முகத்தில் இருந்துதான் நம்ம வாளை அதாவது ஆரியர்களைப் படைக்கிறான்! தோள்களில் இருந்து ராஜபரம்பரையைச் சிருஷ்டி செய்கிறான்! வயிற்றில் இருந்து வணிக ஜாதியைப் படைக்கிறான்! காலில் இருந்து மேலே சொன்ன மூவருக்கும் ஏவல் செய்யும் ஜாதியைப் படைக்கிறான்! இதுதான்—ப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு வருண மக்கள் பிறக்கும் மர்மம்! இந்த முறை பாரத தேசத்திலே க்ஷீணித்துப் போகாதபடி, பெரியவா காலமுதல் கவனமாக பார்த்துக் காப்பாற்றி வந்தி ருக்கா! இப்போது ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்! பிறவியில் உயர்ந்தவனும் இல்லை; தாழ்ந்தவனும் இல்லை என் றெல்லாம் பிரசிங்கக் கிளம்பி இருக்கிறது இந்த பௌத்தம்.

பாணக்கியர்: இதுக்கு என்ன செய்யறது!

பட்டர்: ...ம்....

(யோசிக்கிறான்)

பாணக்கியர்: ஓய்! எனக்கொரு யோசனை தோன்றது....

பட்டர்: என்னங்காணும் உம் யோசனை?

பாணக்கியர்: வேலியை எடுத்துவிட்டால்....

வாசவதத்தா: வேலியை எடுத்து விடுவதா?....

பாணக்கியர்: ஆமாடீ, ஆமாம். பயிர் தானாக அழிந்துபோகும் அல்லவா?

பட்டர் : ஆமாம், ஆமாம்.

பாணக்கியர் : இதோ பாரும், பௌத்தம் சிலாகிக்கப்படுவதற்கு எல்லாம் காரணம் என்ன தெரியுமோ ?

பட்டர் : உபகுப்தன் பிரசங்கமோன்னு !

வாசவதத்தா : ஆமாம். உபகுப்தர் உபதேசத்தைக்கேட்க பௌத்த விஹாரத்திற்கு பாடலிபுரமே திரண்டுபோவதை நானே பல முறை பார்த்திருக்கிறேன் ! அழகாகப் பேசுகிருராம்....

பாணக்கியர் : அது கிடக்கிறது அனுச்சாரம் ! (பட்டரிடம்) ஓய் ! முதலில் நாம் எப்பாடுபட்டேனும் அவன் கீர்த்திக்கு ஏதாவது களங்கம் ஏற்படும்படியான காரியமா பார்த்து செய்து முடிக்கணும் ! பிறகு...

பட்டர் : தொலைந்தது பௌத்தம். ஆனல்...

பாணக்கியர் : என்னங்காணும் ஆனல் ?

பட்டர் : ஒன்றுமில்லை. என்ன செய்யறதா உங்க உத்தேசம் ?...

பாணக்கியர் : (வாசவதத்தையைப் பார்த்துச் சிரித்தவண்ணம்) ஈஸ்வர சங்கல்பமும் இருந்து வாசவதத்தையும் மனம் வைப்பாளானல்...

வாசவதத்தா : என்ன ! நானு ?

பாணக்கியர் : ஆமாம். இந்த உளியைக் கொண்டுதான் அந்தக் கருங்கல்லைப் பிளக்கவேண்டும் ! வேறு வழியில்லை !

பட்டர் : அது எப்படிங் காணும் ?

பாணக்கியர் : சொல்கிறேன் கேளும். வாசவதத்தை அரண்மனை நர்த்தகி ! அது மாத்திரமல்ல—ரதியைப்போல அழகி ! இவள் கட்டாணிமுத்துக் காலில் விழ எத்தனையோ யுவராஜாக்கள் காத்திருக்கிருர்கள் ! அந்த அரசிளங்குமரர்களை அலட்சியமாகப் பார்த்து அவர்களை வெறுப்பதைப்போல் வார்த்தைகளை அள்ளி வீசி, உபகுப்தன் ஒருவனுக்கே இவள் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் சொந்தமாக்கி விட்டவள்போல் ஊர் முழுவதும் சொல்லிவைத்து அந்த பௌத்த சாமியாரை இந்த உல்லாச மாளிகைக்குள் அழைத்து வந்துவிடு. காவி

கட்டியவன்—புத்ததேவனை கடவுளாகப் போற்றுபவன் காமுகனுன் என்று களங்கம் கற்பிப்பதும் அப்பொய்க் கதையை மௌரிய சாம்ராஜ்யம் முழுவதும் பரப்புவதும் என் பொறுப்பு!

பட்டர்: ஆமாம், ஆமாம். ஆரியாவர்த்தத்திற்கும்—தர்மத்திற்கும்—இதை வாசவதத்தை நிச்சயம் செய்தாக வேண்டும்.

பாணக்கியர்: (வாசவதத்தையைப் பார்த்து) என்ன சொல்கிருய்?

பட்டர்: (குறுக்கிட்டு) சொல்வதற்கு என்னங்காணும் இருக்கிறது? புலிக்குப் பாயவும், மீனுக்கு நீந்தவும் நாம் போதிக்கவா வேண்டும்?

வாசவதத்தா: (ஏதோ எண்ணத்தில்) உபகுப்தர் பௌத்த விஹாரத்தில் அல்லவா இருப்பார்?

பாணக்கியர்: பௌத்த விஹாரத்திற்குள்தான் பெண்களை நுழையவே விடுவதில்லையே!

பட்டர்: இவள் ஏன் அவ்வளவு தூரம் சிரமப்படவேண்டும்? அவன்தான் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் இந்தப் பக்கமாகத்தானே பிக்ஷைக்குப் போகிருன்! அப்போது...

பாணக்கியர்: ஆமாம், ஆமாம். அதுதான் சரியான வேளை.

பட்டர்: இன்று மாலை...

வாசவதத்தா: (புன்முறுவலுடன்) முயற்சிக்கிறேன்.

(மூவரும் சிரிக்கிருர்கள்.)

## காட்சி 25

காலம்: காலை

இடம்: ஓர் வீதி

இருப்போர்: வாசவதத்தா, உபகுப்தர், மக்கள்.

(உபகுப்தர், தன் வீட்டிற்கு எதிரில் வருகிற தருணத்தில் வாசவதத்தா ஓடோடியும் வந்து வணங்குகிருள்.)

உபகுப்தர்: (ஆசிர்வதிக்கிருர்)

தர்மம் சரணம் கச்சாமி!
சாமி சரணம் கச்சாமி!
சங்கம் சரணம் கச்சாமி!

வாசவதத்தா : (எழுந்து) ஸ்வாமி ! பௌத்த விஹாரத்திற்கு வந்து தங்களரும் உயரிய போதனைகளை கேட்கவேண்டும் என்று வெகுநாளாய் பிரியங் கொண்டிருக்கிறேன். பெண்களைத் தாங்கள் பௌத்த விஹாரத்திற்குள் அனுமதிப்பது இல்லை என்று பேசிக் கொள்கிறார்களே, ஏன் அப்படி ?

உபகுப்தர் : பெண்கள் ஓயாமல் பேசுகிறார்கள். தங்களுக்குத் தெரிந்ததைப்பற்றி மாத்திரமல்ல ; தங்களுக்குத் திருப்தி தருவதைப் பற்றியும் பேசுகிறார்கள். பேச்சுக்குப் பேச்சு அலை கடல் வற்றிவிடுமோ என அஞ்சும் அளவுக்கு சிரிக்கிறார்கள். பிறரையும் சிரிக்க வைக்கிறார்கள். பிக்ஷுக்களை அதிசயப் பிறவிகளைப்போல் வெறிக்க வெறிக்கப் பார்க்கிறார்கள்.

வாசவதத்தா : அதனால்....

உபகுப்தர் : பிக்ஷுக்களுக்கு, அமைதியைக் குலைக்கும் பெண்களின் பேச்சுக்களும் ஆத்ம பரிசுத்தத்தை அலைக்கழிக்கும் மோக விகாரப் பார்வைகளும் பிடிப்பதில்லை. அதனால்தான் அவர்களை ஆசிரமத்தில் அனுமதிப்பதில்லை.

வாசவதத்தா : பற்றற்றவர்கள் ஆணென்றும் பெண் என்றும் பிரித்துப் பார்க்கலாமா ?

உபகுப்தர் : என்ன !

வாசவதத்தா : அழகான பெண்ணொருத்தியுடன் தனியாக இருக்கும்பொழுது விகார உணர்ச்சி ஏற்படக்கூடும் என்ற அச்சமே அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

உபகுப்தர் : தாயே ! வீண் பேச்சுக்கள் விஷயங்களை பழுதாக்கி விடுகின்றன !

வாசவதத்தா : பேச்சை மாற்றுவானேன் ? பெண் என்ற பேதமின்றி தங்களைப் போன்ற தவசிரேஷ்டர்களால் பழக முடியுமா என்றுதான் கேட்கிறேன்.

உபகுப்தர் : முடியும்!

வாசவதத்தா : அப்படியானால், அடியாரின் வீட்டிற்கு அருள்கூர்ந்து வந்து இந்த ஏழையிடும் பிக்ஷையை ஏற்று ஆசிர்வதிக்கக் கோருகிறேன்.

உபகுப்தர் : உங்கள் வீடு எங்கே இருக்கிறது ?

வாசவதத்தா : எதிரிலே தெரியும் இந்த 'ராஜபவனம்' என்னுடையதுதான்.

உபகுப்தர் : அம்மா ! உன் கணவரிடம் இதற்கு அனுமதி பெற்றிருக்கிறாயா ?

வாசவதத்தா : ஸ்வாமி ! எனக்கு நாயகன் இல்லை. நான் ஒரு அரண்மனை நாட்டியக்காரி.

உபகுப்தர் : (குழம்பிய குரலில்) என்ன ! நீங்கள் ஒரு ராஜ நர்த்தகியா ? அம்மா ! உங்களைப் போன்றவர் அழைப்பை நான் ஏற்பதற்கில்லை. அவர்கள் உல்லாச மாளிகைக்குள் பிக்ஷை பெற நான் வருவதற்கில்லை.

வாசவதத்தா : ஸ்வாமி ! எதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் ? நான் சொல்கிறேன் ; உங்களுக்கே உங்கள் உள்ள உறுதியின்மீது நம்பிக்கை இல்லை என்கிறேன், மறுக்கிறீர்களா ?

உபகுப்தர் : என்ன !

வாசவதத்தா : நாட்டியக்காரியின் மாளிகைக்குள் நுழைந்தால் மயக்கிவிட்டால் என்ன செய்வது என்று மருளுகிறீர்கள், இல்லையா ?

உபகுப்தர் : நர்த்தகி, நாவடக்கமாய் இரு.

வாசவதத்தா : "புலனடக்கமாயிரு" என்று ஆயிரம் முறை போதித்திருக்கிறீர்கள். புடம்போட்டுப் பார்ப்போம் என்றால்...

உபகுப்தர் : கண்டபடி உளறாதே.

வாசவதத்தா : நான் ஒன்றும் உளறவில்லை. நீங்கள்தான் வாழ்க்கை அனுபவத்திற்கு கொஞ்சங்கூட ஒத்துவராத வரட்டு உபதேசம் செய்கிறீர்கள். உலகத்திற்கும் இதனால் நன்மை இல்லை. உங்களுக்கும் இதனால் நன்மை இல்லை.

உபகுப்தர் : இப்படிச் சொல்ல...

வாசவதத்தா : எனக்கு முழு உரிமை உண்டு.

உபகுப்தர் : (குழம்பிய நிலையில்) நர்த்தகி.

வாசவதத்தா : ஞானகுருவே ! பஞ்சேந்திரியங்களையும் அடக்கி ஆளும் பக்குவநிலை பெற்ற பிக்ஷு என்பது உண்மையானால்,

என் அழைப்பை ஏற்றுக்கொண்டு என்னுடைய மாளிகைக்கு வரத்தான் வேண்டும். அடிகளே! உள்ளே வாருங்கள். இன்று என் இல்லத்தில் பிச்சை ஏற்கவேண்டும். இல்லா விட்டால், வீதிதோறும் வீடுதோறும் சென்று "உபகுப்தர் உண்மையான துறவி இல்லை, வேடதாரி" என்று உரக்கச் சொல்லுவேன். ஊருக்கு மாத்திரம் உபதேசித்து, உள்ளுக் குள் உலுத்துப்போன உறுதிகளைப் பற்றிக்கொண்டிருக்கும் உங்கள் போன்றோரின் கபடநாடகத்தை நான் வெளிப்படுத்து வேன். போலிப் பிக்ஷுக்களை—பொய் பிரசாரங்களை குழிதோண்டிப் புதைப்பேன். நான் எதற்கும் பயப்பட மாட்டேன்.

(கூட்டத்தில் இருந்தவர்கள் முணுமுணுப்பு அதி கரித்துக் கொண்டிருக்கிறது.)

ஒருவன்: ராஜ நர்த்தகி சொல்வது சரிதான்.

மற்றொருவன்: வலைவீசிப்பார்த்தும் ஆள் அகப்படாததால் இப் போது வம்புக்கு இழுக்கிறாள்.

இன்னொருவன்: அடித்து விரட்டுங்களய்யா, அவளை.

வாசவதத்தா. அடியுங்கள்; கொல்லுங்கள் என்னை. அதற்காக நான் அஞ்சப் போவதுமில்லை; அழப்போவதும் இல்லை. உண்மை தெரிய வேண்டாமா, உங்களுக்கு? கூட்டத்தி லிருக்கும் ஒருவர் கூறினார். நர்த்தகி ஆள் பிடிப்பதற்காக இந்த நாடகம் ஆடுகிறாள், என்று. கட்டிளம் பருவத்தைக் கண்டு என் காலில் விழ பல பட்டத்தரசர்கள் என் வீட்டு வாயிலில் காத்திருக்கிறார்கள். தங்கக் கட்டிகளோடு சிங்கக் குட்டிகளும் தவமிருக்கிறார்கள் என் திவ்ய தரிசனத்திற்கு! பாதச் சிலம்பொலியைக் கேட்கவே எத்தனையோ பணம் படைத்தவர்கள் "ராஜபவன" வாசலிலே காத்துக் கிடக் கிறார்கள். அவர்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு, இந்த ஆண்டிமேல் ஆசைகொள்ள நான் என்ன அறிவில் லாதவளா?

ஒருவன்: உடலை விலைபேசும் நீ உத்தமகுலக் கொழுந்துபோல பேசுகிறாய்...

மற்ருெருவன் : வெட்கம் இருந்தால் வீதியில் நின்றுகொண்டு இப்படிப் பேசுவாளா ?

வாசவதத்தா : ஒன்றுமட்டும் சொல்ல என்னை அனுமதியுங்கள். விசுவாமித்திரர்—முற்றும் துறந்த அந்த முனிவர் மேனகையைக் கண்டதும் மோக விகாரப்பட்டு, பல்லாண்டு காலமாக அரும்பாடுபட்டுத் தேடிய பக்குவநிலையைத் துறந்துவிட்டாரல்லவா ? கேளுங்கள், நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். உருக்காத தங்கத்தாலும் சோதிக்காத இலட்சியத்தாலும் சோதனைக்கு ஆளாகாத ஆத்ம சிந்தனையாலும் ஒன்றும் உபயோகமில்லை. உபகுப்தர்—வைரமாக இருக்கலாம். நானும் மறுக்கவில்லை. வைரம் ஜொலிக்க வேண்டுமானுல் சாணை பிடிக்கத்தான் வேண்டும். தங்கம் பிரகாசிக்க வேண்டுமானுல் தணலில் காய்ச்சத்தான் வேண்டும். இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா ?

சிலர் : ஆமாம், ஆமாம்.

ஒருவன் : நீங்கள் சொல்லுவதும் நிஜந்தான்.

வாசவதத்தா : நல்ல முடிவிற்கு வந்ததற்காக உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புத்த பிக்ஷுவை நான் என்னுடைய இல்லத்திற்கு எதற்காக அழைத்தேன் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு விட்டீர்கள். அதுவே போதும். நான் போகிறேன்.

(திரும்புகிருள்)

உபகுப்தர் : (குழப்பம் தீர்ந்து) நில்லுங்கள். உங்கள் அழைப்பை நான் ஏற்றுக்கொண்டேன். இப்போதே, உன் மாளிகைக்கு வருகிறேன்.

வாசவதத்தா : மிக்க மகிழ்ச்சி, வணக்கம். அடிகளே வாருங்கள். (வாசவதத்தா வழிகாட்டிச் செல்ல அவளைப் பின் தொடர்ந்து செல்கிருர் உபகுப்தர். மக்கள் மகிழ்ச்சியும் மருட்சியும் கொண்டு நிற்கிருர்கள். சிலர் கலைந்து செல்கிருர்கள்.)

## காட்சி 26

காலம் : பகல்.

இடம் : வாசவதத்தா மாளிகை.

இருப்போர் : வாசவதத்தா, உபகுப்தர், நாட்டியக்காரிகள், பணிப் பெண்கள்.

(வழிகாட்டியபடி உபகுப்தரை வாசவதத்தா வரவேற்கிருள்.)

வாசவதத்தா : (பட்டு மஞ்சத்தைக் காட்டி) இங்கே அமருங்கள்.

உபகுப்தர் : இல்லை, கீழேயே உட்காருகிறேன்.

வாசவதத்தா : நான் உங்களுக்கு என்ன பிக்ஷை அளிப்பதாம்?

உபகுப்தர் : தாயே! எனக்கு ஒன்றும் வேண்டாம். என் வாக்கை நிறைவேற்றி விட்டேன். இங்கே—உங்கள் உல்லாச மாளிகைக்கு என்னை வரும்படி கூறினீர்கள்; வந்தேன். இனி எனக்குப் போக விடை கொடுங்கள்.

வாசவதத்தா : ஸ்வாமி! நீங்கள் இங்குதான் இருக்கவேண்டும்.

உபகுப்தர் : அது என்னுல் முடியாது. நான் போகவேண்டும்.

வாசவதத்தா : ஏன், இன்னும் இங்கு இருந்தால் இந்தத் தாதிப் பெண் உங்கள் மனதை மாற்றிவிடுவாள் என்று பயப்படுகிறீர்களா?

உபகுப்தர் : பயமா! நான் எதற்காகப் பயப்படவேண்டும். பயம் என்பது பலவீனர்களுக்குரியது. நர்த்தகி! இது நான் தியானம் செய்யவேண்டிய நேரம். எனக்குப் போக விடை கொடுங்கள்.

வாசவதத்தா . ஏன், உங்களால் இங்கே தியானம் செய்ய முடியாதா?

உபகுப்தர் : முடியும். இங்கே தியானம் செய்ய இடம் இருக்குமோ?

வாசவதத்தா : ஓ, இருக்கிறதே! அது உங்களுக்குப் பிடிக்குமோ?

(வாசவதத்தை ஒரு அறையின் கதவைத் திறந்துவிடுகிருள். அந்த அறைச் சுவர்களில் அழகி-

களின் பலவித தோற்றங்கள் அழியா வர்ணங்களினுல் தீட்டப்பட்டு இருந்தன. கருத்தைக் கவரும் தந்தக் கட்டில் ஒன்றும் காட்சி அளித்தது. வெள்ளிக் கிண்ணங்களில் பழைய தேறல் ஊற்றி வைக்கப்பட்டு இருந்தது.)

உபகுப்தர் : (முகத்தைச் சுளித்துக் கொண்டு) இதுவா பூஜா மடம்?

வாசவதத்தா : ஆம், ஸ்வாமி! தாசிதானே நான்! நாடி வந்தவர்களை வாடவிட முடிகிறதா, நான். அவர்கள் என்னைப் பூஜிக்கும் அந்தரங்க அறை. இது பூஜா மடமல்ல; கலவிக்கூடம்.

உபகுப்தர் : நர்த்தகி, போதும் இந்தப் பேச்சு. என்னைத் தனியே விடு.

(கண்களை மூடிக்கொண்டு பத்மாசனம் போட்டு அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டுவிட்டார். சிறிது நேரம் அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த வாசவதத்தா "கலீர், கலீர்" என பாத சலங்கைகள் சப்திக்க நடனம் ஆடத் தொடங்கினுள்... உபகுப்தர் பொதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார். வாசவதத்தா அவள் அருகில் அசைந்தாடும் ஒரு பூங்கொடிபோல் வளைந்து கிடந்தாள்.)

வாசவதத்தா : ஸ்வாமி...

உபகுப்தர் : ...ம்...

வாசவதத்தா : உடல் குறைபாடு உடையது என்றும் அழியக் கூடியது என்றும் சொல்கிறீர்கள் அல்லவா?

உபகுப்தர் : ...ம்...

வாசவதத்தா : ஆத்ம சௌந்தரியம் அழியாதது; கொஞ்சமும் குறைபாடு கொள்ளாதது என்றெல்லாம் போதிக்கிறீர்கள் அல்லவா, அதை என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை, ஸ்வாமி...

உபகுப்தர் : ...ம்...

வாசவதத்தா : என்னைப் பாருங்கள். என் அழகைப் பாருங்கள். "வாசவதத்தை அழகுப் பிழம்பு! பூத்துக் குலுங்கும் பூங் கொடி, அசைந்தாடும் தென்றல், வண்ணமலர், மின்னற்கொடி, இனிக்கும் கரும்பு" இன்னும் என்னவெல்லாமோ என்னைப் பற்றி நம் அரச அவைக் கவிஞர்கள் வர்ணித்திருக்கிறார்கள். பாவாணர்கள் உள்ளபடியே என்னைப் படம் பிடித்து இருக் கிறார்களா என்று பாருங்கள். வாசவதத்தையின் உடல் பரி பூர்ண சௌந்தர்யம் வாய்ந்தது என்கிறார்களே எல்லோரும். நீங்களும் பாருங்களேன்...உம்...

(என்று சொல்லி மேலே போர்த்தி இருந்த மெல்லிய சல்லா பட்டுப் போர்வையைத் தூர எறிகிறாள். உபகுப்தரும் மயக்கமுற்ற நிலையில் அவளை உற்றுப் பார்த்து)

உபகுப்தர் : நர்த்...தகி...

(வெட்கத்தினால் வாசவதத்தையின் தலை தரையை நோக்கி வளைகிறது. இரு கைகளாலும் வாசவதத்தை யின் சந்திரவதனத்தைப் பிடித்து நிமிர்த்தி உபகுப்தர் தன் உதடுகள் அருகே கொண்டுவரும் பொழுது அவர் பார்வையில், வாசவதத்தையின் வலது முகவாய்க்கட் டைப் பக்கம் இருந்த ஒரு மச்சம் படுகிறது. உப குப்தர் வாசவதத்தையின் பிடியிலிருந்தும் விடுவித்துக் கொண்டு எழுந்து விடுகிறார்.)

வாசவதத்தா : (திடுக்கிட்டு) ஸ்வாமி...

(அவரை அணைக்க அருகில் வருகிறாள்.)

உபகுப்தர் : நர்த்தகி. உடல் குறைபாடு உடையதுதான். அழியக் கூடியதுதான்...

வாசவதத்தா : என்ன சொல்கிறீர்கள், ஸ்வாமி...

உபகுப்தர் : உங்கள் உதட்டிற்குக் கீழே வலது பக்கம் இருக்கும் பிறவி மச்சத்தைப் பாருங்கள். பிறப்பு, குறைபாடு உள்ளது உடல் தத்துவம் பரிபூர்ண சௌந்தர்யம் வாய்ந்ததல்ல. வெறும் மாயை; வெளிப் பூச்சு. தாயே! உங்களுடைய சோதனை முடிந்துவிட்டது. சோதனையில் நான் வெற்றி பெற்றுவிட்டேன்.

இனி, உடலின் உலகாயதக் கவர்ச்சி எதற்கும் நான் அடிமையாகமாட்டேன். அம்மா! எனக்கு ஆசியை அளியுங்கள். போதிநாதர் ஆன்மீக ஒளி தந்துவிட்டார். போக விடை கொடுங்கள்.

வாசவதத்தா: (திடுக்கிட்டு, மோக மயக்கம் தெளிந்து) ஸ்வாமி! அபசாரம் செய்து விட்டேன். அடியாளை மன்னியுங்கள்.

(உபகுப்தர் பாதங்களில் விழுந்து வணங்குகிறுள்)

உபகுப்தர்: தாயே! உங்கள் சக்தி மிகவும் பலம் வாய்ந்தது. உறங்கிப்போன என் ஆத்ம பலத்தை எழுப்பிவிட அது மிகவும் உதவி செய்திருக்கிறது. தாயே! நீங்கள் சொன்னதைப் போல, உருக்காத தங்கத்தாலும் சோதிக்காத லட்சியத்தாலும் சோதனைக்கு ஆளாகாத ஆத்ம சிந்தனையாலும் ஒன்றும் உபயோகமில்லைதான்.

(போகத் திரும்புகிருர்)

வாசவதத்தா: ஸ்வாமி! உள்ளே வாருங்கள். ஏழையிடும் பிச்சையை ஏற்றுக் கொள்ளுங்கள்...

உபகுப்தர்: வருகிறேன் தாயே... உங்களுடன் வரும் காலம் வரும். அப்போது நானே வலிய வந்து அழைப்பேன்.

(உபகுப்தர் போகிருர்.)

வாசவதத்தா: (அழுகிருள்) ஸ்வாமி... ஸ்வாமி...

வாசவதத்தா உபகுப்தரைப் பின் தொடர்ந்து வருகிருள்)

## காட்சி 27.

காலம்: பகல்.

இடம்: வாசவதத்தாவின் மாளிகைக்கு முன்னுல்—வீதியில்

இருப்போர்: உபகுப்தர், வாசவதத்தா, பாணக்கியர், பட்டர், மக்கள்...

(பேசியபடி நின்று கொண்டிருக்கிருர்கள் பொது மக்கள். உபகுப்தர் வருகிருர்.)

உபகுப்தர்: சாமி சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
புத்தம் சரணம் கச்சாமி

வாசவதத்தா : (ஓடிவந்து காலில் விழுந்து) ஸ்வாமி ! அடியாள் செய்த அபசாரத்திற்கு மன்னியுங்கள்...மன்னியுங்கள் மகாப் பிரபு...

உபகுப்தர் : தாயே ! பகவான் புத்தர் பிரானை நம்புங்கள்...அந்த அவமூர்த்தியின் அருள் தங்களைச் சகல துன்பங்களிலிருந்தும் காப்பாற்றும்...பௌத்த மார்க்கத்தைத் தழுவி நீ புத்த பிச்சுனி யாவாய். தேவனுக்குத் தொண்டு செய்—அது உன் துன்பத்தைத் தீர்க்கும் ! பழி பாவம் நிறைந்த உன் வாழ்வு பரிசுத்தமாகும் ! சென்றதினி மீளாது ; இன்று புதிதாகப் பிறந்தோம் என்று எண்ணிக் கொண்டு சேவை செய். புத்த பகவானின் புனிதக் கொள்கைகளான அன்பையும் அறத்தையும் வளர்த்து அறிவையும் அருளையும் அடைவாய். ஒன்றே செய் ! நன்றே செய் ! இன்றே செய் ! செல், தாயே ! செல் !

புத்தம் சரணம் கச்சாமி !
தர்மம் சரணம் கச்சாமி !
சங்கம் சரணம் கச்சாமி !

(புத்த பீடிகையிலுள்ள மணி ஒலிக்கிறது. போகிறார்.)

பட்டர் : பார்த்தேளா !

பாணக்கியர் : போறுத காலம் ஓய், போறுத காலம் !
(தலையில் அடித்துக் கொள்கிறார்.)

பட்டர் : மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினோமே, நாம்—மடையர்கள் ?

பாணக்கியர் : சந்தேகமேயில்லை ! தக்ஷசீல யுவராஜனைக்கொண்டு முதலில் பௌத்த மதத்தைப் பொசுக்கத் திட்டம் போட்டோம். இரண்டாவதாக இந்தத் தாசி !

பட்டர் : எல்லாம் ஏமாற்றம் !

பாணக்கியர் : வாருங்காணும் போகலாம். இங்கே இருந்தா நமக்கும்னு மனமாற்றம் ஏற்பட்டுடலாம்போலன்னு தோன்றது...

(பட்டரை இழுத்துக் கொண்டு போகிறார் பாணக்கியர். சிலர் இவர்களைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்).

## காட்சி 28.

காலம் : காலை.

இடம் : பௌத்த விகாரம்.

இருப்போர் : அசோகன், சங்கமித்திரை, உபகுப்தர், ரதகுப்தர்

(புத்தர் பிரானின் சிலை உயர்ந்த பீடத்தின்மேல் வைக்கப் பட்டிருக்கிறது. அசோகவர்த்தனரும் சங்கமித்திரையும் தேவனின் திருவுருவத்தை வணங்கிவிட்டு வந்து அமருகின்றனர்.)

அசோகன் : குழந்தாய் ! கலிங்கப்போரில் நான் கண்ட காட்சிகளும், போர்க்களத்தில் இருந்து திரும்பிய பிறகு நீ எனக்கு வழங்கிய அருமையான கருத்துரைகளும் என் கண்களைத் திறந்துவிட்டன. உன்னரும் உபதேசத்தினுல் என் மனம் புத்தர் பிரானிடத்தின் பெரிதும் ஈடுபட்டு இருக்கின்றது. இவ்வுலக ஆசாபாசங்களில் சிக்குண்டு, அவற்றினின்றும் விடுபடும் வகையறியாது வருந்தி உழலும் மக்களுக்கு அறிவொளி மிகுந்த தமது அருள்மார்க்கத்தைக் காட்டி அருளிய போதிநாதனின் புனித கொள்கைகள் என் உள்ளத்தை முற்றிலும் கவர்ந்து விட்டன. குழந்தாய் ! நானும் உன்னைப்போலவே தனிமையில் சாந்தி பெறும் நல் வாழ்வு வாழ ஆசைப்படுகிறேன். மக்களிடையே அன்பையும், அறிவையும், அறத்தையும், அமைதியையும் பரப்பும் நல்வழிகளில் என் வாழ்நாளைச் செலவிடவே நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

சங்கமித்திரை : தந்தையே ! தாங்கள் சன்மார்க்க சேவை செய்ய எண்ணங்கொண்டு இருப்பது கண்டு நான் மகிழ்ச்சி கொள்கிறேன். தங்களைப் போன்ற பரந்த நோக்கம் கொண்டவர்கள் தோன்றுவது அபூர்வமே ஆகும். சாதாரணமாய் சக்கரவர்த்தியும் சன்மார்க்கமும் இரண்டு துருவங்கள் எனலாம். துருவங்கள் ஒன்றை ஒன்று தொட முடிவதில்லை ! அரசும் அகிம்சையும், அதிகாரமும் அறமும், படைவீரரும் பரமாத்ம பக்தியும் போக வாழ்க்கையும் யோக சிந்தனையும் ஒன்றுகூடி வாழ்வது இல்லை.

அசோகன் : உண்மைதான் குழந்தாய் ! இதை உணர முடியாமல் வாழ்க்கைப் பந்தங்களாகிய இவ்வுலக ஆசாபாசங்களுக்கு அடிமையாகி உலகில் மேலும் மேலும் அதர்ம வாழ்க்கையை நடத்தவே மக்கள் ஆசைப்படுகிறார்கள். இன்றைத் தினத்திலிருந்து பகவான் புத்தர் பிரானின் போதனைகளின்படி நடக்க நான் சித்தமாய் இருக்கிறேன்.

சங்கமித்திரை : (மகிழ்ச்சிப் பெருக்கோடு) அப்பா !

அசோகன் : சங்கமித்திரை ! காரிருள் நிறைந்த உலக வாழ்விலிருந்தும் கடைத்தேற ஒளி மயமான புதியதோர் மார்க்கத்தைக் கண்டேன். தேவனால்தான் இன்றைய உலகம் தெளிவு பெற முடியும் என்பதை தெரிந்து கொண்டேன். அவரடிகளில் பணியாற்ற அன்பு கொண்டேன். அவரது அருள் மொழிகளில் ஆர்வம் கொண்டேன். குழந்தாய் ! இந்த முயற்சியில் என் ஆருயிரையும் அற்பணிக்க நான் ஆயத்தமாய் இருக்கிறேன். என் முதல் வேலையாக, அகிலமெலாம் கல் வெட்டுக்களை நிறுவி, பகவான் புத்த பிரானின் போதனைகளை பாருலகெங்கும் பரப்புவதென்று நான் திட்டம் வகுத்திருக்கிறேன்.

சங்கமித்திரை : தந்தையே ! அகிலமெலாம் கல் வெட்டுக்களை நிறுவுவதும், பாருலகெங்கும் பிரசாரகர்களை அனுப்பி புத்த தேவனின் போதனைகளைப் பரப்பிவிட்டால் மட்டும் போதாது. நாட்டினர் அதை நம்ப—அது காட்டிடும் நல்ல பாதையிலே நிர்ப்பயமாக நடமாட இன்னொன்றும் செய்தாக வேண்டும்—நாம் !

அசோகன் : என்ன அது ?

சங்கமித்திரை : தந்தையே ! (அசோகனின் இடுப்பில் இருந்த உடைவாளை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு) இதயத்திலே பரிசுத்தமான அன்பு இருந்தாலும் கையிலே இருக்கும் இந்தக் கொடுவாளைக் கண்டு மக்கள் சந்தேகம் கொள்ள இடமும் இருக்கிறது, இல்லையா, அப்பா ? உதடுகள்—"சமாதானம் சமாதானமே நமக்குப் பிரதானம்" என ஓயாமல் உச்சரித்து இருக்க, உள்ளமோ இராணுவத்தைப் பெருக்க என்னென்ன வழிகள் இருக்கின்றன என்று உணர்ந்தறிவதில் உழலும்வரை உண்மையான சுபிட்சமும் சௌஜன்யமும் எப்படியப்பா உண்

டாக முடியும் ? அன்பு உண்டாகவேண்டிய உள்ளத்திலே அச்சம் பிறக்கிறது. ஏன் அப்படி ? வலியோர் சிலர் எளியோர் பலரை வாட்டக்கூடும் என்ற எண்ணத்தினுலன்ரே ! தந்தையே ! சமாதானமும் சன்மார்க்கமும் எங்கும் என்றும் நிலவ வேண்டும் என்று நினைக்கின்றவர்கள், அதே நேரத்தில் பெரும் படையைப் பேணி வளர்த்து வருகின்றனரே, ஏன் அப்படி ? பொலிவும் மலிவும் பெற்றதாக இருக்கவேண்டும் நம் படை என்று எண்ணங் கொண்டு பெரும் பொருள் செலவிடுகின்றனரே, எதற்காக ? சமாதானம் சாசுவதமானது என்பதில் அவர்களுக்கு சந்தேகமா ?...சொல்லொன்றும் செயல் வேருகவும் இருந்தால் யாரால் எதைச் சாதிக்க முடியும் ?...

அசோகன் : சேனை ஒருபுறமும் சன்மார்க்க சேவை பிறிதோர்புறமும் கொண்டிருப்பது கூடாது என்கிருயா, சங்கமித்திரை ? அடிக்கும் கைகளே அணைக்கவும் உதவவில்லையா ?

சங்கமித்திரை : ஏன், இப்படியும் சொல்லலாம் அல்லவா ? "இரும்பு பிடித்தவன் கை எப்போதாகிலும் சும்மா இருக்குமா? தந்தையே ! பாருலகெங்கும் பகவான் புத்தர்பிரானின் பொன் மொழிகளைப் பரப்ப விரும்பும் அதே சமயத்தில் பிற நாடுகளைக் கைப்பற்ற வேண்டும்; பிறரை அடக்கி ஆள வேண்டும் என்ற அதிகார வெறியும் படைபலத்தின் உதவியால் வளர்ந்து கொண்டே போக வழியும் இருக்கிறது அல்லவா ?

அசோகன் : ஆமாம் அதனுல்...

சங்கமித்திரை : இம்சையின் சின்னமாக விளங்கும் இராணுவத்தைக் கலைத்துவிடவேண்டும்.

அசோகன் : (திடுக்கிட்டு) என்ன ! இராணுவத்தைக் கலைத்து விடவேண்டுமா ?

சங்கமித்திரை : ஆமாம் தந்தையே......

அசோகன் : (குறுக்கிட்டு) குழந்தாய் ! இராணுவமின்றி கலகக்காரர்களை அடக்குவது எப்படி ? படையும் போர்க்கருவிகளுமின்றி பகைவர் படையெடுப்பைத் தடுப்பது எப்படி ? சதி

காரர்களின் சூழ்ச்சிகளைச் சமாளிப்பது எப்படி ? சங்கமித்திரை ! மௌரியர் சாம்ராஜ்யம் இராணுவமின்றி நிலைத்திருக்க முடியுமா ?

(அவர்கள் உரையாடலைக் கவனித்தபடி பௌத்த பிக்ஷு உபகுப்தரும் அமைச்சர் ரதகுப்தரும் அங்கே வருகிறார்கள்)

உபகுப்தர் : (வந்தவண்ணம்) ஏன் முடியாது ? இரு பெருஞ் சுடர்களான சூரிய சந்திரர்கள் கணமேனும் காலந்தவறாமல் தங்கள் கடமைகளைச் செய்து வரவில்லையா ? அவைகளை இயக்கி விடும் சக்திதான் எது ! சக்கரவர்த்தி ! காட்டில் வசிக்கும் முனிவர்களுக்கும் யோகிகளுக்கும் யார் பாதுகாப்பு ? காட்டு விலங்குகள் ஏன் அவர்களை அணுகுவதில்லை ? விஷப் பாம்புகள் ஏன் அந்தச் சாந்தசீலர்களைத் தீண்டுவதில்லை ?...

அசோகன் : ஸ்வாமி ! மாளிகையைக் காக்கும் மதிற்சுவரை இடித்துத் தள்ளிவிட வேண்டும் என்பது மாண்பாகுமா ?

ரதகுப்தர் : நமது படை துஷ்டர்களையும் துன்மார்க்கத்தையும் அடக்கிச் சன்மார்க்க நெறியைப் பாதுகாக்கும் ஓர் தர்ம ஆயுதமாக வல்லவோ அமைந்து இருக்கிறது. அதைத் தாங்கள் ஏன் ஆட்சேபிக்க வேண்டும் ? ... ஆலோசித்துப் பாருங்கள்.... நாளை, நாட்டில் அமைதி குலைந்து உள் நாட்டுக் கலகம் ஏதாவது உண்டாகிவிட்டால்—அண்டை அயல் நாட்டினர் நம் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு நம்மைக் தாக்க ஆரம்பித்து விட்டால் அவைகளை எல்லாம் அடக்குவது எப்படி ? இதுவொருபுறம் இருக்க, திடீரென்று இராணுவத்தைக் கலைத்துவிட்டால் சிப்பாய்கள் கலகம் செய்யவும் கூடும். ஏனெனில், அவர்கள் எல்லாம் நமது நோக்கத்தையும் அகிம்சையின் தத்துவத்தையும் உணர நெடுங்காலமாகும்.

சங்கமித்திரை : உண்மைதான். திடீரென்று சிப்பாய்கள் வேலை இழந்து போகும்படி செய்தால் மூர்க்கர்களும் முன் கோபக்காரர்களுமான அவர்கள் ஆட்சிக்குத் தொல்லைகள் தரவும் தீர்மானிக்கக் கூடும்....அதனால் என்ன ?...பத்துக்கோடி மக்களின் நலன் பெரிதா ? பத்து லட்சம் படைவீரர்களின் நலன்

பெரிதா ? பலர் இன்பம் அடைய வேண்டுமானுல், சிலர், சிலகாலம் துன்பப்படும்படியாகத்தான் நேரிடும்.

உபகுப்தர் : சக்கரவர்த்தி ! திடீரென்று இராணுவத்தைக் கலைத்து விடுவதால் திக்கற்றுப் போகும் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதினின்றும் தவறிவிடக்கூடாது. இராணுவத்தைக் கலைத்துவிடுவதால் அவர்கள் வேலையிழந்து விட்டதாகக் கருத இடங் கொடுக்காதபடி இராணுவத்தைக் கலைத்துவிடுவதற்கு முன்னுல் அதனின்றும் திறமை மிக்கவர்களையும் தந்திரசாலி களையும் தனித்தனியாகப் பிரித்தெடுத்து, அவர்களை எல்லாம் நமது அண்டை நாடுகளான பர்மா, சீனு, ஜப்பான், இலங்கை முதலான இடங்களில் புத்த தேவனின் புனிதக் கொள்கை களைப் பரப்பும் பிரசாரப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். அவர்கள் அன்பை அணிந்து உண்மையான தொண்டு செய்வ தன் மூலம் அறியாமை ஒழியும். அகிம்சை ஓங்கும். மேலும், நமது நாடு கிராமங்கள் நிறைந்ததாகையால், தொழிலியலில் எவ்வளவுதான் முன்னேற்றம் அடைந்தாலும் இது என்றும் விவசாய நாடாகவே இருந்து வரும். எனவே, எஞ்சி நிற்பவர் களை உழவர்களாக மாற்றி உணவு உற்பத்தியைப் பெருக்க லாம். நல்ல பாதைகள் . . . நீர்ப்பாசன வசதிகள், கூட்டுறவுப் பண்ணைகள் . . . கட்டிட வேலைகள் ஆகியவற்றில் அவர்களை ஈடுபடுத்தவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். உழைப்பின் பெருமையும் உயரும். திண்ணை வேதாந்தமும் சண்டையும் சச்சரவுகளும் பொல்லாங்கும் பொருமைகளும் போட்டியும் போராட்டங்களும் ஒழிந்து போகும். இல்லாமை ஒழியும், இடர் நீங்கும். இன்பம் பெருகும். உண்மையான சமா தானமும் சந்தோஷமும் நீடித்த சுபிட்சமும் சௌஜன்யமும் உண்டாகும்.

அசோகன் : ஸ்வாமி ! இருள் படர்ந்திருந்த எனது மனதிற்கு இன்று தாங்களோர் அறிவொளிகாட்டி இருக்கிறீர்கள். தங்களரும் உபதேசமும் சங்கமித்திரையின் துறவும் கலிங்கப் போரில் நான் கண்ட பயங்கரப் படுகொலையும் என் மெல்லிய உணர்ச்சி

களைத் தாக்கி நான் செய்துவந்த மிகப் பெரிய அநீதிகளை உணர்த்தி இருக்கின்றன.

(எழுந்திருக்கிறான். அப்போது, இடையிலே தொங்கிக் கொண்டிருந்த நீண்ட வாளொன்று கரத்தில் தட்டுப்பட்டுக் "கிண்" என்ற ஓசையை எழுப்ப—வாளை உருவிப் பிடித்துக் கொண்டு இதயக் குமுறலைக் கொட்டுகிறான்)

மண்ணிலே மறைந்து கிடந்த உன்னைக் கண்டெடுத்து, களிம்பைப் போக்கி, உலைக்களத்திலிட்டு உருக்கி, வாளாக வடித்தெடுத்த மனித குலத்தினரில் எவ்வளவு பேர் இரத்தம் குடித்தாய்? எத்தனை உயிர்களை சுவை பார்த்தாய்? எவ்வளவு குடும்பங்களை சித்ரவதை செய்தாய்? சீரழித்தாய்? (உபகுப்தரைப் பார்த்து) ஸ்வாமி! (சங்கமித்திரை இருந்த பக்கமாகத் திரும்பி) குழந்தாய்! உண்மையாகச் சொல்லுகிறேன்—உறுதியாகச் சொல்லுகிறேன்! **இம்சையின் சின்னமாக விளங்கும் இந்த ஆயுதத்தை இனியொருபோதும் இந்தக் கைகளால் தீண்டவேமாட்டேன்.** இந்த உறுதியைக் கடைப்பிடிப்பதில் இன்னல் கோடி எதிர்ப்பட்டாலும்—அசோகன் அழிவதானாலும்—மௌரிய சாம்ராஜ்யமே பறிபோனாலும் நான் இனி ஒரு நாளும் வாளேந்தவே மாட்டேன்.

(வாளை ஒடித்துத் தூர எறிகிறான்)

சங்கமித்திரை: தந்தையே! தங்கள் மனமாற்றத்தைக் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். உள்ளமோ, உணர்வோ இல்லாத—இரக்கமற்ற அரக்கர்களாக நாம் வாழ்ந்தது போதும். அன்பு தேவனின் அடியார்களாக மாறுவோம். ஆயுத பலத்தால் சாதித்தவைகளைக் காட்டிலும் ஆன்மீக பலத்தால்—அகிம்சையால் நாட்டிற்கு நல்ல பணிபுரிவோம். புயலைத் தென்றலாக எண்ணிப் பூரிப்போம். எல்லோரும் எல்லாம் பெற்றே இன்புற்று இருப்பது கண்டு மகிழ்வோம்! வேலும் வாளும் ஒலிவிட்ட நாட்டிலே ஏடும் எழுத்தாணியும் வளர்ப்போம். பாசறைகள் நிறைந்த நமது நாட்டைப் பள்ளிக்கூடங்களாக மாற்றுவோம். குன்றாத வளமும், குறையாத மக்கட்

செல்வமும், அழியாத புகழும் கொண்டிருக்கிற நாம் "அன்பே நம் அரண் ! அறிவே நமது ஆயுதம் ! ஒன்றே குலம்! ஒருவனே தேவன்" என்று ஆள்வோம்.

உபகுப்தர் : ராஜரிஷி ! எல்லாம் வல்ல பகவான் புத்தர் பிரானை நம்புங்கள். அந்த அவதார மூர்த்தியின் அருள் தங்களுக்குச் சகல சக்திகளும் அளிக்க வல்லது ! ஓம் சாந்தி

சாமிசரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தா மம் சரணம் கச்சாமி

(சங்கமித்திரையும் சேர்ந்து சொல்கிருள்)

## காட்சி 29.

காலம் : காலை.

இடம் : ஒரு வீதி.

இருப்போர் : உபகுப்தர், வாசவதத்தை, ஒரு சீமான், வழிப் போக்கர்...

(வீதியோரத்தில் வாசவதத்தை குஷ்டரோக நோயால் பீடிக்கப்பட்டு கவனிப்பாரற்று விழுந்து கிடக்கிருள். சிலர் போவதும் வருவதுமாக இருக் கிருர்கள். அப்போது அவ்வழியே ஒரு சீமான் வருகிருன்.)

வாசவதத்தா : (கூப்பிடுகிருள்) பிரபு ! பிரபு !...

(சீமான் ஒரு பொன் நாணயத்தை எடுத்து அவளிடம் வீசுகிருன்.)

வாசவதத்தா : பிரபு ! என்னை தங்களுக்குத் தெரியவில்லையா ? நான்தான் வாசவதத்தா !

சீமான் : (குழம்பிய மனதோடு) வாசவதத்தாவா ?

வாசவதத்தா : ஆமாம் ! பிரபு...

(சீமான் முகத்தைச் சுளித்துக் கொள்கிருர்.)

சீமான் : இப்போது உனக்கு என்னவேண்டும். சீக்கிரம் கேட்டுத் தொலை...

வாசவதத்தா : பிரபு ! என்னுல் நடக்க முடியவில்லை ! கொஞ்சம் கையைப் பிடித்துத் தூக்கிவிட்டால் அதோ அந்த மரத்தடியில் அமர்ந்து கொள்வேன்.

சீமான் : தொட்டுத் தூக்குவதா ! சீ !...

வாசவதத்தா : (சிரித்துக் கொண்டே) எத்தனை முறை என்னை குழந்தையைப்போல் தூக்கி வைத்துக்கொண்டு சிரிக்கச் சிரிக்கப் பேசி கன்னஞ் சிவக்கவைத்துக் கொத்தியிருக் கிறீர்கள். எச்சில்பட்ட கனி என்பேன் ; அதனுல் என்ன என்பீர்கள். புளித்துவிட்டது என்ருலும் பசியென்று பேசி புசித்துவிட்டுப் போனீர்.

சீமான் : ஏய் என்ன உளர்ற ?

வாசவதத்தா : உலகம் கற்றுத்தந்த உண்மை. நடையும் தளர, தேகமொடுங்க, நாவது குளற, கண்கள் மங்க வீதியில் விழுந்துகிடக்கும் ஒருநாள் எனக்கு வருமென்று உணராமல் உங்களைப் போன்றவர்கள் உறவே உன்னதமானது—உண்மை யானது என்று நம்பியிருந்தேன். பாருங்கள் நீங்கள் கொடுத்த பரிசை...பாருங்கள்...

(சீமான் கோபத்தோடும் அவளைப் பார்க்கப் பிடிக்காமலும்)

சீமான் : வீட்டிற்குப் போனதும் வேலைக்காரனை அனுப்புகிறேன். அவன் வந்து உன்னைத் தூக்கி அப்படி ஓரமா உட்காரவைப் பான்...சீ ! சீ !

(போகிருன்-சீமான். வெறுப்போடும் வேதனை யோடும் வருகிருள் வாசவதத்தா. கொஞ்சநேரங் கழித்து உபகுப்தர் வருகிருர்.)

உபகுப்தர் : சாமி சரணம் கச்சாமி.
சங்கம் சரணம் கச்சாமி.
தர்மம் சரணம் கச்சாமி.

(வேதனையால் முனகிக்கொண்டிருக்கும் வாசவ தத்தையைப் பார்த்துவிட்டு அவளைத் தூக்க வருகிருர்....)

வாசவதத்தா : ஸ்வாமி ! என்னைத் தொடாதீர்கள் ! பாவி நான்— எச்சிற்பண்டம் !...

உபகுப்தர் : வாசவதத்தா ! வருந்தாதே ! இப்போது உன்னை நான் காதலிக்கிறேன்.

வாசவதத்தா : (நெஞ்சு விரியும் குரலில்) ஸ்வாமி...

உபகுப்தர் : வா ! (அவளைத் தூக்குகிறார்) வா !

வாசவதத்தா : ஸ்வாமி ! என்னைத் தொடாதீர்கள். பரத்தை நான் ...உங்கள் பரிசுத்தம் பாழ்பட்டுப் போக நான் உடன்பட மாட்டேன். விட்டுவிடுங்கள். வீதியில் ஒரு அனாதையைப் போல் சாகவேண்டும் என்பது என் விதி !

உபகுப்தர் : வீணாக மனதை அலட்டிக்கொள்ள வேண்டாம். வேளை வந்துவிட்டது ; நான் உன்னை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்...உன்னைப்போன்ற நிர்ப்பாக்கியர்கள் என் காதலுக் குரியவராகிறார்கள்...

வாசவதத்தா : என்னால் தங்களுக்கு ஒரு துளியும் இலாபமில்லை. என்றாலும் அன்பு பாராட்டுகிறீர்கள்...

உபகுப்தர் : அன்பு தானே கொடுக்கும் ; தன்னையே கொடுக் கும். அது என்றும் அழியாதது, வெளி அழகு வானவில்லைப் போன்றது என்பது தெரியுமாதலால் எங்களைப் போன்றவர் அதை விரும்புவதில்லை. உடல் குறைபாடு உடையது என்று வது ஒருநாள் அழியக்கூடியது என்று சொன்னேன்...

வாசவதத்தா : உண்மைதான் ஸ்வாமி, உண்மைதான். அதை உணராமல் பரிசுத்தமான தங்கள் வாழ்வுப் பயணத்தில் தடங் கற்களைப் போட முயன்றேன்....

உபகுப்தர் : நடந்தவைகளை மறந்துவிடுவோம் நாம். தாயே ! பக வான் புத்தர்பிரானை நம்புங்கள். அழியாத ஆத்ம சௌந்தர் யத்தை அடைவீர்கள் வாருங்கள் ; பௌத்த விஹாரத்திற்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போகிறேன்.

வாசவதத்தா : (ஆச்சரியத்துடன்) பௌத்த விஹாரத்திற்கா ?

உபகுப்தர் : ஆமாம்.

வாசவதத்தா : ஸ்வாமி...

உபகுப்தர் : சாமி சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
(என்று சொல்லிக்கொண்டே வாசவதத்தையைத் தாங்கி நடத்திச் செல்கிறார். வாசவதத்தை "சாமி சரணம் கச்சாமி" என்று உபகுப்தரோடு சேர்ந்து சொல்கிறாள்.)

## காட்சி 30.

காலம் : காலை.

இடம் : துறைமுகம்.

இருப்போர் : அசோகன், சங்கமித்திரை, உபகுப்தர் மற்றும் பலர்.
(வங்கத் துறைமுகம், மரக்கலங்கள் தயாராகப் பாய்மரங்கள் விரிக்கப்பட்டு நிற்கின்றன. கடலலைகள் கரையில் மோதுகின்றன. ஆயிரக்கணக்கானவர் கூடி இருக்கிறார்கள். எங்கும் ஒரே ஆரவாரம்.

சங்கமித்திரை பிக்ஷுணிக் கோலம்கொண்டு, தன்னுடைய கரத்தில் மகாபோதி விருட்சத்தின் பசுங் கிளை ஒன்றைத் தாங்கியவண்ணம் வருகிறாள். அமைச்சரும் சங்கமாலையும் அவளோடு வருகிறார்கள். பேசியபடி அசோகனும் உபகுப்தரும் பிரவேசிக்கிறார்கள். சக்கரவர்த்தி அசோகன் கண்களில் நீர்வழிய சஞ்சலமடைகிறான். உபகுப்தர் அவருக்கு ஆறுதல் அளிக்கிறார்.)

உபகுப்தர் : ராஜரிஷி! தாங்கள் வருத்தப்படாமல் சங்கமித்திரைக்கு விடை தரவேண்டும். இலங்கையில் போத மாதவனின் அருளொளியைப் பரப்பும் புனித பணியை சங்கமித்திரை மனமுவந்து எற்றுக்கொண்டு இருக்கிறாள்.

அசோகன் : ஸ்வாமி!...

உபகுப்தர் : எல்லாம் தேவனது அருள். மௌரிய சாம்ராஜ்யம் மற்ற நாடுகளுடன் கொள்ளும் தொடர்புக்கு இது முதல்படி

பாக அமையும். சமாதானத்தை நிலைநாட்டுவதிலும் சுபிட்சமும் சௌஜன்யமும் பொருந்திய புதியதோர் சமுதாயத்தை ஏற்படுத்துவதிலும் பகவான் புத்தர்பிரான் அருளிய புனிதப் பாதையின்படி சங்கமித்திரை செயலாற்றுவார்.

சங்கமித்திரை : அப்பா ! விடை கொடுங்கள் ; போய் வருகிறேன்.

அசோகன் : (விழிகளில் நீர் வழிய) சங்கமித்திரை ! எனக்கு நீதான் உண்மை வழிகாட்டிய ஒளிவிளக்கு ! அன்பை அணிந்து தொண்டாற்ற எனக்குக் கிடைத்த அணையா விளக்கு ! பெற்ற பொழுதினினும் பெரிதும் பூரிக்கிறேன். உன்னுடைய விருப்பம் எதுவாயினும் நான் ஒன்றும் தடைசெய்ய விரும்பவில்லை. குழந்தாய் ! பகவான் புத்தரின் அன்புக்குரல் உன் மூலமாக இலங்கையில் ஒலிக்கட்டும். புத்த பகவான் புனிதக் கொள்கைகளான அன்பையும் அறத்தையும் வளர்த்து அறிவையும் அருளையும் இலங்கை பெறவேண்டுமென்றே நானும் உன்னைப்போல் பிரியப்படுகிறேன். இந்த முயற்சியில் நீ வெற்றிபெற விழைகிறேன்—வேண்டுகிறேன்.


(சங்கமித்திரை அசோகனையும் உபகுப்தரையும் வணங்குகிறாள்.)

உபகுப்தர் : குழந்தாய் ! புத்தர்பெருமான் கருணையும் அருளும் உன்னைக் காக்கட்டும்.

புத்தம் சரணம் கச்சாமி !
தர்மம் சரணம் கச்சாமி !
சாமி சரணம் கச்சாமி !

(சங்கமித்திரை கலத்தின் மேல்தட்டில் நின்றபடி எல்லோரையும் வணங்குகிறாள். கலம் ஆடுகிறது காற்றில் ! புத்த பீடிகையிலிருந்தும் மணி ஒலிக்கிறது.)

காமராசர் பல்கலைக்கழக ... அன்பளிப்பு ... தி.க.ச




Jacket Printed at Neo Art Press, Madras-2